பக்கங்கள்: 09

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 08 வெள்ளிக்கிழமை 25.08.2023 கதிர் 287

# இந்தியாவின் உதவியுடன் திருமலையை பொருளாதார மையமாக்க நடவடிக்கை

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவிப்பு

1980களில் மகாவலி அபிவிருத்தித் திட்டம் செயற்படுத்தப்பட்டது போன்று கிழக்கு அபிவிருத்தித் திட்டமும் துரிதப்படுத்தப்பட்டு நாட்டின் பொருளாதாரத்திற்கு புத்துயிரளிக்கும் சூழல் ஒன்று உருவாக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

திருகோணமலை விமானப்படை தளத்தில் நேற்று நடைபெற்ற திருகோணமலை அபிவிருத்தி தொடர்பான விசேட கூட்டத்தில் கலந்துகொண்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிழக்கு மாகாணத்தின் குறிப்பாக திருகோணமலை மாவட்டத்தின் அபிவிருத்தி செயற்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காகவே இன்று இந்தக் கூட்டம் ☞2

## இனி இது ரகசியம் அல்ல!

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மடுவில் ஆற்றிய உரை ரெலோவினதும் அதன் தலைவர் செல்வம் அடைக்கலநாதனதும் உண்மை முகத்தை மட்டுமன்றி தமிழ்த் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் இரட்டை வேடத்தையும் அம்பலப்படுத்தி நிற்பது குறித்து நேற்று உங்களுடன் பகிர்ந்த கொண்டிருந்தேன்.

அது ரணிலால் வடக்கில் ஏற்பட்ட குழப்பம். ரணில் எங்கு போனாலும் குட்டையைக் குழப்பி மீன்பிடிக்கும் வழக்கத்தைத் கொண்டவர்தானே! அவர் மடுவுக்கு வந்தது கத்தோலிக்க திருச்சபைக்குள் பெரும் சலசலப்பையும் குழப்பதையும் ஏற்படுத்தியுள்ளது. திருச்சபையையும் உடைத்துப் பிளப்பதற்கு ரணிலும் சில பாதிரியார்களும் சதித் திட்டம் தீட்டுகிறார்களோ என்று சந்தேகப்படுமளவிற்கு அதிர்வுகளை ஏற்படுத்தியிருக்கிறது ரணிலின் மடுப் பயணம். அது பற்றித்தான் இன்றைக்கு உங்களுக்குச் சொல்லப் போகின்றேன்.

கடந்த ஓராண்டுக்கும் மேலாக ☞2

## மயக்க மருந்துக்கு நாட்டில் தட்டுப்பாடு

நாடளாவிய ரீதியில் உள்ள வைத்தியசாலைகளில் சத்திரசிகிச்சைக்கு முன்னர் நோயாளர்களுக்கு பயன்படுத்தப்படும் மயக்க மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக அகில இலங்கை வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஜயந்த பண்டார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

மயக்க வாயுக்கள் தட்டுப்பாடு காரணமாக நுவரெலியாவைத்தியசாலையில்சத்திரசிகிச்சை இரண்டுநாட்களுக்குமட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

நுவரெலியா வைத்தியசாலையில் ☞2

## சீனர்களுக்கு வந்ததும் வீசா வசதி நாடாளுமன்றக் குழுவில் ஆய்வு

சீனப் பிரஜைகள் இலங்கைக்கு வரும்போது, வந்ததும் வீசா வழங்கும் வசதியை (onarrival visa facility) ஏற்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் மற்றும் மண்டரின் மொழியில் ஒன்லைன்மூலம்விசாவிண்ணப்பங்களை வழங்குவதற்கான சாத்தியக் கூறுகள் குறித்து சர்வதேச தொடர்புகள்பற்றியதுறைசார் மேற்பார்வைக் குழுவில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்துடன் ஆபிரிக்க மற்றும் மத்திய கிழக்கு நாடுகள் தொடர்பான இலங்கையின் அயலுறவுக் கொள்கை குறித்து சர்வதேச தொடர்புகள்குறித்தம்குழுவில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

சர்வதேச தொடர்புகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு அதன் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தலைமையில் நாடாளுமன்றத்தில் கூடியது.

அதற்கமைய, அயலுறவு அமைச்சில் செயற்படும் ஆபிரிக்க மற்றும் மத்திய கிழக்கு வலயம் தொடர்பான பிரிவின் பணிகள் மற்றும் அந்த வலயம் சம்பந்தப்பட்ட இந்நாட்டின் இராஜதந்திரக் கொள் ☞2

## இனக்கலவரம் ஏற்படலாம் என்பது குறித்து அனைத்துக் கட்சிகளுக்கும் விளக்கம் தேவை

### நாடாளுமன்றத்தில் சஜித் பிரேமதாச வலியுறுத்து

நாட்டுக்குள் மீண்டும் இனக்கலவரமொன்றுஏற்பட்டு பெரும்அழிவுஏற்படும்நிலை இருப்பதாக வெளியாகும் தகவல்கள்பற்றியஉண்மை தன்மை தொடர்பில் ஆட்சியாளர்கள் அனைத்துக் கட்சிக்கூட்டத்துக்குஅழைப்பு விடுத்து தெளிவுபடுத்த வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றையதினம் விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றுகையிலேயே அவர்இதனைத்தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் இனங்களுக்கிடையில் முரண்பாடு ஏற்பட்டு, நாட்டுக்குள் மீண்டும் கலவரம், வெடிக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாகப் பல்வேறுஉளவுத்தகவல்கள் தெரிவித்துள்ளனஎன்றுதேசிய மற்றும்சர்வதேச ஊடகங்கள் சில தினங்களுக்கு முன்னர் செய்திவெளியிட்டிருக்கின்றன.

இது மிகவும் பயங்கரமான நிலைமை. நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு தாக்கத்தை ஏற்படுத்தும் விடயம்.

அதனால், அனைத்துக் கட்சிகளையும் உடனடியாக அழைத்து, இனக்கலவரம், வெடிக்கப்போவதாக ஊடகங்களில் வெளியாகி இருக்கும் செய்தியின் ☞2

## கஜேந்திரகுமாருக்கு முழு பாதுகாப்பு தரும்படி டிலான் எம்.பி. வலியுறுத்து



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திர குமார்பொன்னம்பலத்துக்காக சுதந்திர மக்கள் சபையின் உறுப்பினரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டிலான் பெரேரா சபையில் குரல் எழுப்பினார்.

நாடாளுமன்றில் நேற்று ஒழுங்குப்பிரச்சினையை எழுப்பிய அவர், கஜேந்திரகுமாரின் பாதுகாப்பு தொடர்பில் கேள்விகளைத் தொடுத்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இன்றையதினம் (நேற்று) நாடாளுமன்றத் தெரிவுக்குழு கூட்டத்திற்கு வருகைதந்திருக்கவேண்டும். ஆனால் அவர் வருகை தந்திருக்கவில்லை. அவரை தொலைபேசியில் அழைத்தபோது, அவர் வருகை தரமுடியாது என்று கூறினார்.

அவரது வீட்டை நாளையதினம் (இன்று) நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தலைமையில் சுற்றிவளைப்பதற்கு தயார்ப் படுத்தல்கள் ☞2

## குடிதண்ணீர் விநியோகத்திற்கு கூட்டு வேலைத் திட்டம் தயார்

நாட்டில் கடும் வரட்சி நிலவும் நிலையில், குடிதண்ணீர்த் தேவையை அத்தியாவசிய அவசர நிலையாகக் கருதி, தடையின்றிவழங்குவதற்கான கூட்டு வேலைத்திட்டமொன்றை முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளது.

நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள்அபிவிருத்திஅமைச்சர் ஜீவன் தொண்டமானின் கோரிக்கைக்கமைய பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில், நாடாளுமன்றக்கட்டடத்தொகுதியில் நடைபெற்றகூட்டதின்போதே இது தொடர்பில் முடிவெடுக் கப்பட்டுள்ளது.

இதன்படி நீர்வழங்கல், நீர்பாசனம், பொது ☞2

## இனக் கலவரம் தொடர்பில் எந்த புலனாய்வு தகவலும் கிடையாது

### பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் திட்டவட்டம்

இனக்கலவரம் தொடர்பில் எந்தவொரு வெளிநாட்டு புலனாய்வுப் பிரிவினரிடமிருந்தும் எவ்வித தகவலும் கிடைக்கவில்லையென பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் தெரிவித்தார்.

குருந்தூர்மலை விவகாரத்தினை மையப்படுத்தி இனங்களுக்கு இடையிலான மோதல்கள் ஏற்படும் என்றும் அது நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்றும் இந்திய புலனாய்வுஅமைப்பான'றோ' இலங்கைத்தேசியபுலனாய்வு பிரிவுக்கு தகவல்களைப் பரிமாற்றியுள்ளதாக வெளியாகும் தகவல்கள் குறித்துக் கோரியபோதே அவர் மேற்கண்டவாறுதெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

சமூக ஊடகங்களில் பரப்பப்படும் வதந்திகள் தொடர்பில் எல்லா சந்தர்ப்பங்களிலும் ☞2

## ரயில் பயணங்களில் தாமதம் ஏற்படும்

கொழும்பு கோட்டை இரயில்நிலையத்தில்இருந்து பயண நடவடிக்கையினை முன்னெடுக்கும் பல இரயில் சேவைகளில் தாமதம் ஏற்படுமென இரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

குறித்த அறிவித்தலின் படி, கொழும்பு கோட்டை இரயில் நிலையத்தில் இருந்து இன்று(நேற்று) பயண நடவடிக்கையினை முன்னெடுக்க திட்டமிடப் பட்டிருந்த 6 ரயில்கள் தாமதமாக புறப்படும் நிலைமை ஏற்பட்டது.

ரயில் மின் தொழில்நுட்ப வல்லுநர்கள் முன்னெடுத்துவரும் தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக இவ்வாறுதாமதம்ஏற்பட்டது.

ரயில்கட்டுப்பாட்டாளரை தாக்கிய சம்பவம் ☞2

## ஆசிரியர்களின் ஆட்சேர்ப்புக்கு மாகாண சபைகளுக்கு அதிகாரம்

### விரைவில் வர்த்தமானி வெளியீடு

மாகாண சபைகளுக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை இணைத்துக்கொள்ளும்அதிகாரத்தை மாகாண சபைகளுக்கு வழங்கும் வர்த்தமானி அறிவித்தலை வெளியிட எதிர்ப்பார்த்துள்ளதாக கல்வி அமைச்சர்சுசில்பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுஉரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்வரும் அமைச்சரவைக் கூட்டத்திற்கு மாகாண சபைகளுக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை இணைத்துக்கொள்ளும்அதிகாரத்தை மாகாண சபைகளுக்கு வழங்குவது தொடர்பான பிரேரணையை பரிந்துரைக் கப்படவுள்ளது,

அடுத்த இரண்டு வாரங்களுக்குள் இது தொடர்பிலான வர்த்தமானி வெளியிடவுள்ளது. அடுத்த இரண்டு வாரங்களுக்குள்ஓய்வுபெற்ற மற்றும் சேவையிலிருந்து வெளியேறியவர்களுக்குப் பதிலாக பட்டதாரிகள் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களைபணியமர்த்துவதற்கு மாகாண சபைகளுக்கு அதிகாரம் உள்ளது.

இதேவேளை, விஞ்ஞானம், தொழிநுட்பம் ☞2

## சந்திராயன் 3ஐவிட அதிகம் செலவான 'சுப்ரீம் செட்' எங்கே? அதற்கு என்னாது?

### எதிர்க் கட்சித் தலைவர் நாடாளுமன்றில் கேள்வி

சுப்பிரீம் செட்டை அமைப்பதற்காக செலவிடப்பட்ட 320மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு என்ன நடந்தது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கேள்வியெழுப்பினார்.

இந்தியா சந்திராயன்-3 விண்கலத்தை ஏவி, விக்ரம் தரையிங்கியைவெற்றிகரமாக நிலவின் தென் துருவத்தில் தரையிறக்கியதற்கு வாழ்த்து தெரிவிக்கப்பட்டதன் பின்னர், எதிர்க்கட்சித்தலைவர் இந்தக் கேள்வியை எழுப்பினார்.

சந்திராயன்-01 சந்திராயன்-02 ஆகிய முயற்சிகளை மேற்கொண்டு தற்போது சந்திராயன்-03 நிலவின் தென்பகுதியில் களமிறக்கப்பட்டுள்ளது. இந்தியா இதற்காக, 2008, 2009, 2023 ஆகிய மூன்று ஆண்டுகளில் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இதற்காக 263மில்லியன் அமெரிக்க டொலர் செலவழிக்கப்பட்டுள்ளது.

ஆனால் இலங்கையில் சுப்பிரீம் செட்டொன்றை அமைப்பதற்காக 2012ஆம் ஆண்டே 320மில்லின் அமெரிக்க டொலர்கள் செலவழிக்கப்பட்டுள்ளன. ஆனால் தற்போது வரையில் அந்த சுப்பிரீம் செட் எங்கேயென்றே தெரியாதுள்ளது.

ஆகவே 320 மில்லியன் டொலர்களுக்கு என்ன நடந்தது என்பதை நாட்டு மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும். அதற்காக விசாரணைகளை நடத்தி நாடாளுமன்றத்திற்கு அறிவிப்பு வைக்க வேண்டும் என்றார்.

## சட்டக்கல்லூரி கட்டணங்களின் மீள்பரிசீலனைக்கு வலியுறுத்து

### ஜேவிபி தலைவர் நாடாளுமன்றில் முன்வைத்தார்

2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகாலப்பகுதியில் வருமானத்தைஈட்டிக்கொள்ள இலங்கை சட்டக்கல்லூரி கட்டணங்களை அதிகரித்து வெளியிட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலைமீள்பரிசீலனை செய்யவேண்டுமெனஜேவிபி தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அனுர குமார திஸாநாயக்க வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

சட்டக் கல்லூரியின் கற்கைக் கட்டணம் குறித்து வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலால் நடுத்தர மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். சடுதியான கட்டண அதிகரிப்பால் பலரது சட்டக் கல்லூரிக் கனவு நிச்சயமற்றதாகியுள்ளது.

கடந்த காலங்களில் 6,000 ரூபாவாகக் ☞2

## இனி இது .....

கொலையாளிகளை நீதிமன்றத்திலோ பொலிஸாரிடமோ காட்டிக்கொடுக்காமல், கொலைசெய்தவர்கள் யார்என்றுதமக்குத்தெரியாது என்று தெரிவித்துவிட்டு பின்னர்தாமே அவர்களைக் கொலை செய்பவர்களை இதுவரையில் தமிழ்த் திரைப்படத்தில்தான் பார்க்க முடிந்திருக்கிறது. தமிழ்நாட்டில் குறிப்பாக மதுரைப் பக்கங்களில் இதுபோன்று நடப்பதாக தமிழ்த் திரைப்படங்கள் சித்தரித்து வந்திருக்கின்றன.

பழிக்குப்பழி, கொலைக்குக் கொலை என்கிற பாணியில் இத்தகையவர்கள் செயற்படுவார்கள் என்றும் கொலையாளிகளை தாம் தமது கைகளாலேயே கொல்ல வேண்டும் என்பதற்காகவே அவர்களை பொலிஸாரிடம் காட்டிக்கொடுத்து நீதிமன்றத்தில் தண்டனை வாங்கிக் கொடுக்கமாட்டார்கள் என்றும் இந்தத் தமிழ்த் திரைப்படங்களில் காட்டப்பட்டிருக்கும்.

இந்தக் காட்சிகள் திரைப்படங்களோடு நின்றுவிடாமல் யதார்த்தத்திலும் பரவத் தொடங்கியிருப்பதான அச்சம் உலுக்குகின்றது. இப்போது மன்னாரில் நடந்திருக்கக்கூடிய மூன்று கொலைகளும் இத்தகைய பாணியிலான கொலைகளோ என்கிற சந்தேகமே இந்த அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

2022ஆம் ஆண்டு இறுதி வாக்கில் மன்னார், நொச்சிகுளத்தில் இருகொலைகள் இடம்பெற்றன. அதனுடன் தொடர்புடையவர்கள் என்கிற சந்தேகத்தில் 4 பேர் முக்கியமாகக் கைது செய்யப்பட்டனர். இந்தக் கொலைகளோடு தொடர்புடையவர்கள் என்கிற சந்தேகத்தின் பேரில் மேலும் பலரும் கைது செய்யப்பட்டனர்.

எனினும் கொலைகளைப் பார்த்த நேரடி சாட்சிகள் எவரும் கொலையாளிகளைத் தாங்கள் தெளிவாகப் பார்க்கவில்லை, தங்களுக்க அவர்களை அடையாளம் தெரியவில்லை என்று நீதிமன்றத்தில் கூறிவிட்டனர். இதனால் சந்தேகநபர்களால் இலகுவில் பிணையில் வெளிவரமுடிந்தது.

இப்போது அந்தச் சந்தேகநபர்களில் இருவர் கொல்லப்பட்டுவிட்டனர். சில மாதங்களுக்கு முன்னர், பிணையில் வெளிவந்து சிறிது காலத்திலேயே, சந்தேகநபர்களில் முதலாமர் அவரது வீட்டுக்குள் இரவு நேரத்தில் புகுந்த ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார். இரண்டாவது சந்தேகநபர் நேற்று மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

அடம்பன் முள்ளிக்கண்டல் பகுதியில் மோட்டார் சைக்கிளில் வயலுக்குச் சென்றுகொண்டிருந்தபோது இந்தக்கொலை இடம்பெற்றுள்ளது. மோட்டார் சைக்கிளில் அவருடன் கூடச் சென்ற மற்றொருவரும் கொல்லப்பட்டுள்ளார். மூன்றாமவர் நொச்சிக்குளம் கொலைகளோடு தொடர்புடையவர் அல்லர் என்றபோதும் கொலைக்கான சாட்சியாக அவர் மாறக்கூடும் என்பதனால் கொல்லப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகின்றது.

வன்னியில் நீண்ட காலம் வாழ்ந்த நண்பர் ஒருவர் ஒரு தகவல் சொன்னார், அவர்கள் (பழிவாங்குபவர்கள்) புலிகளின் காலத்திலேயே அடங்காதவர்கள். வீட்டுக்கொருவரை இயக்கத்திற்கு ஆள்சேர்த்தபோது இவர்கள் வீட்டுக்கும் சென்றார்கள். ஆனால் அவர்களின் வீடுகளில் இருந்த ஆண்கள் காடுகளுக்குள் சென்று மறைந்துகொண்டார்கள். ஒரு நாள் இரு நாள் அல்ல மாதக் கணக்கில் மறைந்து கொண்டார்கள். வீரப்பன் மாதிரி காடுகள் அவர்களுக்கு அத்துப்படி. அங்கிருந்தபடியே தமக்குத் தேவையான பொருள்களைக் கிராமத்தில் இருந்து பெறுவதற்கான தமக்கேயுரிய 'கோட் வேட்'களை எல்லாம் அவர்கள் உருவாக்கி வைத்திருக்கிறார்கள். எதைச்செய்துவிட்டும் காடுகளுக்குள் மறைந்துவிட்டார்களானால் அவர்களை எந்தக் கொம்பனாலும் பிடிக்கமுடியாது. புலிகளும்தான் அவர்களைக் காடுகளைவிட்டு வெளியே கொண்டுவந்து பிடிக்க எவ்வளவோ முயன்றுபார்த்தார்கள். பல அணிகளை அனுப்பி காடுகளில் தேடியும்தான் பார்த்தார்கள். ஆனால் கடைசிவரை அவர்கள் சிக்கவேயில்லை.

அவர்கள் ஒரு மடார் பேர்வழிகள். அவர்கள் வேண்டுமென்றேதான் நீதிமன்றத்தில் கொலையாளிகளை அடையாளம் காட்டாமல் விட்டிருப்பார்கள். பழிவாங்கும் நோக்கத்துடன்தான் அவர்கள் அப்படிச் செய்திருப்பார்கள். இப்போது நடப்பது அவர்களின் பழிவாங்கல் செயற்பாடுகள்தான் - என்றார் அந்த நண்பர்.

அவரது கருத்து ஒரு ஊகம் மட்டும்தான். அவருக்கு மன்னார்ப் பகுதியோடு நீண்ட பரிட்சயம் இருப்பதன் காரணமாக இந்த ஊகத்திற்கு அவர் வந்திருக்கிறார். அது உண்மையா பொய்யா என்பதைப் பொலிஸார்தான் கண்டுபிடிக்கவேண்டும். இல்லையேல் மேலும் சில கொலைகளைத் தடுக்க முடியாமல் போய்விடும்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## இந்தியாவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டப்பட்டது. தற்போது திருகோணமலை மாவட்டத்தின் அபிவிருத்தி தொடர்பான திட்டத்தை சர்பானா ஜுரோன் நிறுவனம் தயாரித்துள்ளது.

அந்தத் திட்டத்தினை அடிப்படையாகக்கொண்டு திருகோணமலையை அபிவிருத்தி செய்வது தொடர்பில் இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையில் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. அதனை நாம் நடைமுறைப்படுத்த வேண்டும்.

அந்த அபிவிருத்தித் திட்டத்தின் பிரகாரம் வெருகல் முதல் பானம, குமன கடற்கரையை அபிவிருத்தி செய்வதற்கும் வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்காக கடற்கரையை பயன்படுத்திக்கொள்ள இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

அதே நேரத்தில், இந்தப் பகுதியில் நவீன விவசாயமொன்றை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. கிழக்கு மாகாணத்தின் ஏனைய பிரதேசங்களும் இதில் உள்வாங்கப்பட வேண்டும். மேலும் மகாவலி அதிகாரசபை மற்றும் காணித் திணைக்களத்தையும் இதற்கு இணைத்துக்கொள்ள வேண்டும்.

திருகோணமலை மாவட்டத்தின் கடற்றொழில், விவசாயம் மற்றும் சுற்றுலாத் துறைகளில் ஏற்படும் இந்த புதிய முன்னேற்றத்துடன் திருகோணமலை நகரத்தை ஒரு முக்கிய வர்த்தக நகரமாக மாற்ற வேண்டும். திருகோணமலைக்குப் பின்னர் மட்டக்களப்புக்கும் அம்பாறைக்கும் இந்த அபிவிருத்தியைக் கொண்டு செல்வதே எமது நோக்கமாகும்.

குறிப்பாக காணிப் பிரச்சினைகளைத் தீர்த்து நாம் இந்தச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். இதன்போது, மகாவலி காணிகள் குறித்து விசேட கவனம் செலுத்தி, அவற்றை எவ்வாறு அபிவிருத்தி செய்யலாம் என்பது குறித்தும் கண்டறியப்பட வேண்டும்.

அத்துடன் திருகோணமலை அபிவிருத்தித் திட்டத்தின் அமுலாக்கத்தில், மகாவலி திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் 1985 திட்டத்தின் பிரகாரம் இருக்கக்கூடிய காணிகளை பெற்றுக்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால் கிழக்கு மாகாணத்தில் சில காணிகள் அமைச்சரவையின் அனுமதியின்றி வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

பல்வேறு மத வழிபாட்டுத் தலங்களுக்கும் அதிகளவான காணிகள் வழங்கப்பட்டுள்ளதாக கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது. எனவே, போட்டி போட்டுக் கொண்டு மத வழிபாட்டுத் தலங்கள் நிர்மாணிப்பதை நிறுத்த வேண்டும். அதன்போது மாகாணத்தின் அரசியல் தலைவர்கள் மற்றும் மதத்தலைவர்களுடன் கலந்துரையாடி சரியான முடிவை எட்டுவது மிகவும் முக்கியமானது என்பதைக் கூற வேண்டும்.

1985ஆம் ஆண்டு, மகாவலி அபிவிருத்தித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டபோது, எடின்பரோ பிரபு இங்கு வருகை தந்து வழங்கிய காணிகள், தற்போது வன ஜீவராசிகள் அமைச்சினால் காடுகளாக வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளன.

இலங்கையில் வனப்பரப்பு 32சதவீதமாக பேணப்பட வேண்டும். அந்த நிலையில் ஏனைய காணிகள் நாட்டின் அபிவிருத்திக்கு பயன்படுத்தப்பட வேண்டும். இன்று சிங்கப்பூர் மற்றும் துபாய் போன்ற நாடுகள் அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக அதிகளவு காணிகளைப் பயன்படுத்தியுள்ளன. அண்மையில் நான் சிங்கப்பூர் சென்றிருந்தபோது அந்நாட்டு அரசு இலங்கையிடம் அரிசியைக் கோரியது.

கடந்த ஆண்டு நாம் அவர்களிடம் அரிசியைக் கேட்டதுபோன்று, இந்த ஆண்டுஎங்களிடம் அவர்கள் அரிசி கேட்கிறார்கள். எனவே, நாட்டில் நவீன விவசாயத்தை உருவாக்கி, விவசாய உற்பத்திகள் மூலம் உலகப் பொருளாதாரத்தை வெல்வதற்கு நாம் செயற்பட வேண்டும்.

திருகோணமலை அபிவிருத்தித் திட்டத்தை விரைவில் நடைமுறைப்படுத்துவதன் மூலம் இந்த அபிவிருத்தி இலக்குகளை எட்டுவதற்கு நாம் முயற்சிப்போம். அதற்கு அரச அதிகாரிகள் உட்பட அனைவரும் அர்ப்பணிப்புடன் செயல்படுவார்கள் என நான் எதிர்பார்க்கிறேன் - என்றார்.

## இனக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெளிவூட்டிக்கொண்டிருக்க முடியாது.

அரசியல் தூண்டுதல் காரணமாக நாட்டில் இனக் கலவரங்களையும் மோதல்களையும் ஏற்படுத்த சிலர் முயற்சிகளை மேற்கொள்வது புலனாகின்றது. அவ்வாறான குழுக்கள் தொடர்பாக பாதுகாப்பு பிரிவினரும் ஆளும் தரப்பும் அவதானம் செலுத்தி வருகின்றன - என்றார்.

## ரயில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பில் ரயில்வே திணைக்களத்தின் மின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவர் கைது செய்யப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதனிடையே, ரயில் மின் தொழில்நுட்ப ஊழியர்களினால் முன்னெடுக்கப்பட்ட பணிப்புறக்கணிப்பு காரணமாக நேற்றைய தினமும் அனைத்து ரயில் சேவைகளிலும் தாமதம் ஏற்பட்டது.

பணிப்புறக்கணிப்பு காரணமாக பயணிகளிடையே அமைதியின்மை ஏற்பட்டதை அடுத்து நிலைமையை கட்டுப்படுத்துவதற்கு பொலிஸார் பணியில் ஈடுபடுத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## ஆசிரியர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களுடன் தொடர்புடைய 5,450 ஆசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை 750 ஆசிரியர்களை நியமிப்பது தொடர்பில் மத்திய மாகாணக் கல்வி அலுவலகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது - என்றார்.

## சீனர்களுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைகள் தொடர்பில் இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இந்த வலயத்திலுள்ள நாடுகள் இலங்கையுடன் நட்புரீதியான கொள்கையிலிருந்து செயற்படுவதாக வெளிவிவகார அமைச்சின் பிரதிநிதிகள் இதன்போது தெரிவித்ததுடன், அந்த உறவுகள் மேலும் வலுப்படுத்தப்படவேண்டும் என்பது குழுவின் கருத்தாக இருந்தது. அதனால், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடித் தேவையான நடவடிக்கைகளை விரைவாக எடுக்குமாறு அதிகாரிகளுக்குக் குழு ஆலோசனை வழங்கியது.

அத்துடன், வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்கள் அல்லது உயர்ஆணையகங்களின் இணையத்தளங்கள் ஊடாக இலங்கை பற்றிய சரியான தகவல்கள் வழங்கப்படவேண்டும் என்றும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

## இனக்கலவரம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உண்மைதன்மை தொடர்பாக ஆளும்தரப்பு தெளிவுபடுத்த வேண்டும். ஏனெனில், நாட்டில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதலைத் தொடர்ந்து நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு சிக்கலான நிலைமை ஏற்பட்டது. எனவே, இந்த உணர்வுபூர்வமான விடயம் தொடர்பாக ஆளும் தரப்புக் கவனம் செலுத்தி, ஊடகங்களில் வெளியாகி இருக்கும் செய்தியின் உண்மைநிலை தொடர்பாக உடனடியாக அனைத்து கட்சிகளையும் அழைத்து தெளிவுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன் - என்றார்.

## குடிதண்ணீர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுகள் இணைந்தே கூட்டு வேலைத்திட்டத்தை முன்னெடுக்கவுள்ளன.

பிரதமரின் செயலாளர் தலைமையில் மேற்படி மூன்று அமைச்சுகளின் செயலாளர்களை உள்ளடக்கிய வகையில் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ள நிலையில், துறைசார் அரச நிறுவனங்களும் இக்குழுவுடன் இணைந்து செயற்பட வேண்டும்.

நாட்டில் நிலவும் கடும் வறட்சியால் குடிநீரை பெறுவதில் உள்ள சிக்கல்கள், சுகாதாரமான நீரை வழங்குவதில் உள்ள நெருக்கடிகள் பற்றி ஆராயப்பட்டு அது தொடர்பில் கருத்துகளும் பெறப்பட்டன. காத்திரமான சில முடிவுகளும் எடுக்கப்பட்டுள்ளன.

## கஜேந்திரகுமா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெறும் காரணத்தால் அவரால் வருகை தர முடியவில்லை. இது மிகவும் பாரதூரமான விடயமாகும்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இந்த நாடாளுமன்றின் சக உறுப்பினர். அவரது தாயார் நோய்வாய்ப்பட்டுள்ளார். அவருக்கும் அவரது வீட்டுக்கும் பாதுகாப்பு அளிக்கவேண்டும். ஆளும் தரப்பு அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டுமெனசபாநாயகரைக் கேட்டுக்கொள்கின்றேன் - என்றார்.

## மயக்க....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த இரண்டு நாட்களாக அவசர சத்திரசிகிச்சைகள் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டது. அதுமட்டுமன்றி இந்த நிலைமைகள் ஏனைய வைத்தியசாலைகளிலும் ஏற்படும் அபாயமுள்ளது - என்றார்.

## சட்டக்கல்லூரி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணப்பட்ட சட்டக் கல்லூரி அனுமதிப் பரீட்சைக் கட்டணம் தற்போது 15,000 ரூபாவாகவும், முதலாம் ஆண்டு மாணவர்களின் கற்கை மற்றும் நூலக செலவுகள் உட்பட ஏனைய செலவுகளுக்காக அறவிடப்பட்ட 18,900 ரூபா தற்போது 67,500 ரூபாவாகவும், இரண்டாம் வருட மாணவர்களிடமிருந்து அறவிடப்பட்ட 15,000 ரூபா தற்போது 40,500 ரூபாவாகவும்: இறுதிஆண்டுமாணவர்களிடமிருந்து அறவிடப்பட்ட 19 ஆயிரம் ரூபா தற்போது 50,500 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

சடுதியாக கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளதால் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள பெரும்பாலான பெற்றோர் தமது பிள்ளைகளின் கனவை நிறைவேற்ற முடியாத நெருக்கடி நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள். இவ்வாறான கட்டண அதிகரிப்பால் திறமையான சட்டத்தரணிகள் தோற்றம்பெறுவதற்கு பெரும் தடை ஏற்பட்டுள்ளது.

சட்டக்கல்லூரி மாணவர்களிடமிருந்து அறவிடும் கட்டணங்களை சடுதியாக அதிகரிக்கும் வகையில் 150 சதவீதத்தில் இருந்து 1400 சதவீதம் வரை அதிகரிக்கும் வகையில் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளமை அநீதி.

2023 மற்றும் 2024ஆம் ஆண்டு காலப் பகுதியில் வருமானத்தை ஈட்டிக் கொள்வதற்கு இலங்கை சட்டக்கல்லூரி எந்த அடிப்படையில் இவ்வாறு கட்டணங்களை அதிகரித்துள்ளது என்பதை நீதியமைச்சர் நாடாளுமன்றத்துக்குத் தெளிவுப்படுத்தவேண்டும் அத்துடன் முறையற்ற வகையில் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலை மீள்பரிசீலனை செய்ய வேண்டும் - என்றார்.

# தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் மூவர் இந்தியாவில் கைது

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் இலங்கையைச் சேர்ந்த மூவர் இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கசின் குமார், அமில நுவான் மற்றும் ரங்க பிரசாத் ஆகியோரும் இவர்களுக்கு பெங்களூரில் ஓர் அடுக்குமாடி குடியிருப்பை வாடகைக்கு எடுத்த பரமேஷ் என்ற நபரும் கைது செய்யப்பட்டுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.



சந்தேக நபர்களுக்கு இலங்கை பாதாள உலகத்துடன் தொடர்பு இருப்பதை சிசிபி அதிகாரிகள் விசாரணையின் போது கண்டுபிடித்துள்ளனர்.(05)

# 101 ஆவது சர்வதேசக் கூட்டுறவு தினம் யாழ்ப்பாணத்தில் நேற்று சிறப்புற்றது



யாழ். மாவட்ட கூட்டுறவு சபையால் நேற்று (வியாழக்கிழமை) 101ஆவது சர்வதேச கூட்டுறவு தின விழா சிறப்பாக முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று காலை இடம்பெற்ற இந்நிகழ்வில் வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

அத்துடன் இந்நிகழ்வின் போது போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு ஆளுநரால் பரிசில்கள் மற்றும் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் கூட்டுறவு திணைக்கள உத்தியோகத்தர்கள், கூட்டுறவாளர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(05)


## தேவை.

கல்வி சம்பந்தமான You tube chanel இற்கு ஆங்கில பேச்சுத்திறமையுள்ள presenter தேவை.(ஆங்கிலத்தில் சரளமாக உரையாற்ற எழுதக் கூடியவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும். 0752604360






காலைக்கதிர் Kalaikkathir

# கடந்த 15 நாள்களில் 5 பொலிஸார் கைது

## கிழக்கு மாகாணத்தில் சம்பவம்



கிழக்குமாகாணத்தில்கடந்த 15நாள்களில்மாத்திரம் 5பொலிஸார்கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாகரை, ஏறாவூர், மற்றும் கந்தளாய் பொலிஸ் நிலையங்களில் பணியாற்றிவரும்அதிகாரிகளேஇவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும், அவர்கள் மீது 'சக பொலிஸ் அதிகாரியைத் தாக்கியமை, இளைஞர் ஒருவரை அச்சுறுத்தி பணம் பறித்தமை, திருட்டில்ஈடுபட்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அவர்கள் ஐவரும் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டு பிணையில் வெளியே வந்துள்ள நிலையில் அவர்கள் பணியில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர்எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

# பௌத்த துறவிகளின் அடாவடி இனமுறுகலுக்கு வழிவகுக்கும்

## பா.அரியநேத்திரன் எச்சரிக்கை



இலங்கையில் உள்ள பௌத்த துறவிகள் சிலரின் அடாவடித்தனம் இனமுறுகலுக்குதூபம்இடுகின்றது, இதனை உடனடியாக அரசாங்கம் தடுத்து நிறுத்த வேண்டும் இல்லை எனில் மீண்டும் 1983, ஜூலை கலவரம் போன்ற நிலை ஏற்படவாய்ப்புள்ளது என மட்டக்களப்புமாவட்டமுன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டம் மயிலத்தமடு மேச்சல் தரையை பார்வையிட சென்றஊடகவியலாளர்கள் உட்படசர்வமததலைவர்கள் அடங்கிய குழுவினரை புத்த பிக்கு உட்பட சிங்கள குண்டர்கள் இணைந்து கடந்த செவ்வாய்க்கிழமை தடுத்து வைத்த சம்பவம் தொடர்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்கள் நாட்டில் எந்த இடத்திலும் எவருடன் சென்றும் தமது ஊடகப்ணியை செய்யும் உரிமை உண்டு.

அதுபோலவே சர்வமத தலைவர்களும் நாட்டில் சமாதானத்தையும் சக வாழ்வையும் ஏற்படுத்த பிரச்சினைகள் உள்ள இடங்களுக்கு சென்று ஒரு சுமுகநிலை தொடர்பாக பார்வை இட்டு நடவடிக்கை எடுக்க உரிமை உண்டு.

ஆனால், இவ்வாறான மனிதநேயம் கொண்ட மதத் தலைவர்களையும், அவர்களுடன்செய்திசேகரிக்கச் சென்ற மட்டக்களப்பு ஊடகவியலாளர்களையும் வழிமறித்துதடுத்துவைக்க புத்தபிக்குக்கு இந்த அதிகாரத்தை வழங்கியவர் யார்?

பௌத்தபிக்குகள் காவி உடை அராஜகத்துக்காகவா இலங்கையில் உள்ளது. புத்தபகவானின் போதனை வழிமறித்து மனிதர்களை தடுத்து வைக்கவா போதித்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மேச்சல்தரையில் அத்துமீறி குடியேற்றம் செய்யும் அராஜகத்தை தட்டிக் கேட்கவும் அதனை தடுக்குமாறும் பலவருடங்களாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலதரப்பட்ட நடவடிக்கைகளை எடுத்தும், அதனை முன்பு இருந்த ஜனாதிபதிகளோ, தற்போதைய ஜனாதிபதி ரணிலோ எந்த ஆக்கபூர்வமான நடவடிக்கையும் காட்டவில்லை.

அதன் உண்மை நிலையை நேரடியாக பார்வையிடவே சர்வமத தலைவர்கள், பண்ணையாளர்கள், ஊடகவியலாளர்கள் சென்றிருந்தனர்.

அவர்களை வழிமறித்து ஒரு பௌத்த துறவி, குண்டர்களை கூட்டிவைத்து தடுத்து வைத்த காட்டுமிராண்டிச் செயலை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு சார்பாகவும், இலங்கைத்தமிழ் அரசுக் கட்சி சார்பாகவும் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

அதேவேளை, இவ்வாறான ஈனச்செயல்கள் தொடருமானால் ஓர் இனக் கலவரத்தை தூண்டும் இவ்வாறான பௌத்த துறவிகளை நீதிமன்றில் நிறுத்தி தண்டனை வழங்க வேண்டும்.

சர்வதேச சமூகம் போர் முடிந்து 14 வருடங்கள் கடந்தும் மீண்டும் இலங்கையில் இனக்கலவரத்தை தூண்டும் பின்னணியில் உள்ள அரசியல்வாதிகளை இனம்காண வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

(05)

# மன்னார் மாவட்ட வைத்தியசாலைகளுக்கு மில்லியன் ரூபா பெறுமதியான பொருள்கள்









கொழும்பு தேசிய வைத்தியசாலையின், வைத்தியசாலைஅபிவிருத்திச்சபை தொண்டுஅமைப்பின்அனுசரணையில் மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் ஒரு தொகுதி மருத்துவ பொருள்கள் மற்றும் உபகரணப்பொருள்கள் கையளிக்கப்பட்டுள்ளன. புதன்கிழமை இந்த நிகழ்வு இடம் பெற்றுள்ளது.

40 மில்லியன் ரூபா பெறுமதியான மருத்துவ பொருள்கள் மற்றும் உபகரண பொருள்கள், அமைப்பின் தலைவர் சுபேதி தேரரால் மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம்கையளிக்கப்பட்டுள்ளன.

குறித்த பொருள்கள் மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் இயங்கும் வைத்தியசாலைகளுக்கு வழங்கும் வகையில் மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

இதற்கான நிதி பங்களிப்பு மற்றும் அனுசரணையை வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் மற்றும் இலங்கையை சேராதவர்கள் வழங்கி உள்ளனர்.

குறித்த மருத்துவ உபகரணங்கள் நேரடியாக வெளிநாட்டில் இருந்து இலங்கைக்கு தருவிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் குறித்த மருத்துவ பொருள்கள் மற்றும் உபகரணப் பொருள்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அபிவிருத்திச்சபை என குறிப்பிடப்படும் தொண்டு அமைப்பின் அனுசரணையில் அந்த அமைப்பின் தலைவர் சுபேதி தேரர், மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் த.விநோதன் ஊடாக உரிய வைத்தியசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)

# யாழில் வழிப்பறி செய்துவந்த போதைக் கும்பல் கைதானது

## நால்வர் கந்தக்காடு மறுவாழ்வு மையத்துக்கு

யாழ்ப்பாணம், மானிப்பாய் பகுதிகளில் வழிப்பறியில் ஈடுபட்டு வந்த போதைக்கு அடிமையான கும்பல் ஒன்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அந்த கும்பலை சேர்ந்த நால்வர், நீதிமன்றஉத்தரவில் கந்தக்காடு மறுவாழ்வு மையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

மானிப்பாய் பகுதிகளில் வீதியில் செல்லும் பொதுமக்களிடம் நேரம் கேட்பது, வழி கேட்பது போன்று பாசாங்கு செய்து வழிப்பறியில் இந்த கும்பல்ஈடுபட்டுவந்துள்ளது.

அத்தோடு இந்த கும்பலைச் சேர்ந்தவர்கள் ஐந்து சைக்கிள்களையும் திருடியுள்ளனர்.

இவை தொடர்பில் பாதிக்கப்பட்டவர்களால் பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின்பிரகாரம், பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

அதன் அடிப்படையில், சாவற்காட்டுபகுதியைசேர்ந்த 20மற்றும்21வயதுக்குட்பட்ட ஐவரை பொலிஸார் கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்த நிலையில், திருடப்பட்டஐந்துசைக்கிள்களும் அவர்களிடம் இருந்து மீட்கப்பட்டன.

அதனையடுத்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் ஐவரையும் சட்ட வைத்திய அதிகாரி முன்னிலையில் முற்படுத்தி, மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தியபோது, அவர்களில் நால்வர் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் என கண்டறியப்பட்டது.

அதன் பின்னர் மருத்துவ அறிக்கையுடன் ஐவரையும் பொலிஸார் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தியபோது, அவர்களில் போதைக்கு அடிமையானநால்வரையும் பொலன்னறுவை, கந்தக்காடு மறுவாழ்வு மையத்துக்கு அனுப்ப உத்தரவிட்ட நீதிவான், மற்றைய நபரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (05)

# கல்முனை மாநகர சபை நிதி மோசடி குற்றச்சாட்டில் கைதான முன்னாள் கணக்காளருக்கு விளக்கமறியல்

கல்முனை மாநகர நிதி மோசடி தொடர்பில் குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைதான முன்னாள் கணக்காளரை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு புதன்கிழமை கல்முனை நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.எம். சம்சுதீன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது குற்றப் புலனாய்வு பிரிவினர் மற்றும் பிரதிவாதிகள் சார்பாக ஆஜரான சட்டத்தரணிகளின் விண்ணப்பங்களை ஆராய்ந்தநீதிவான்முன்னாள் கணக்காளர்உட்பட4சந்தேக நபர்களையும் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

மேலும், கல்முனை மாநகர சபையின் நிதி மோசடிவிவகாரம்தொடர்பில் குற்றப்புலனாய்வு பிரிவினரால்விசாரணைகள்துரிதமாக மேற்கொள்ளப்பட்டுஅண்மைக்காலமாக நால்வர் கைதாகி இருந்தனர். இதில் ஒருவர் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தார். ஏனைய மூன்று சந்தேக நபர்களும் விசாரணைகள் இடம்பெற்றுவந்தநிலையில் தொடர்ந்தும்விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் செவ்வாய்க்கிழமை திருகோணமலையில் வைத்து மருதமுனை-5 பகுதியை சேர்ந்த முன்னாள் கணக்காளர் ஏ.எச்.முகமது தஸ்தீக் (வயது -47) கைதானார்.

இவ்வாறு திருகோணமலையில் வைத்து கைது செய்யப்பட்ட கல்முனை மாநகரசபையின்முன்னாள் கணக்காளர் கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துவரப்பட்டு வாக்குமூலங்கள் பெறப்பட்ட பின்னர், கல்முனை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போது நீதிவான் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

அத்துடன் கைதான முன்னாள் கணக்காளர் உட்படகைதாகிவிளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ஏனைய சந்தேக நபர்களின் சேவைக்காலத்தில் வரியிருப்பாளர்கள்மேற்கொண்ட கொடுக்கல்-வாங்கல் செயற்பாடுகளின்போது மேலும் மோசடி, முறைகேடுகள் இடம்பெற்றுள்ளனவா என்பது தொடர்பிலும் இவற்றுடன்வேறுஎவராவது சம்பந்தப்பட்டிருக்கின்றனரா என்பது குறித்தும் குற்றப் புலனாய்வு பிரிவினரால் தீவிரமாக ஆராயப்பட்டுவருகின்றது.

மேலும் கடந்த காலங்களில் இவ்வரி மோசடி தொடர்பில் விசாரணைகள் பல தரப்பினரால் மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையில், பலர்கைதுசெய்யப்பட்டு பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்தனர்.

அத்துடன் இந்த விடயம் பற்றி கிழக்கு மாகாண பிரதம செயலாளர் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோருக்கும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதன் நிமித்தம் நிர்வாக மட்டத்தில் சுயாதீன விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

அத்துடன் குறித்த நிதி கையாடல்சம்பவம்தொடர்பில் கடந்தகாலங்களில்கல்முனை பொலிஸ்நிலையம்அம்பாறை விடே குற்றப்புலனாய்வுப் பிரிவிடம் விசாரணை பொறுப்பளிக்கப்பட்டிருந்த நிலையில் அண்மையில் குற்றப்புலனாய்வு பிரிவிடம் இவ்வழக்கு விசாரணைகள் ஒப்படைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (05)

# காலி சிறைச்சாலை பற்றீரியா கட்டுப்பாட்டுக்குள் சுகாதார வழிமுறைகளை பேணுமாறு வலியுறுத்து

காலிசிறைச்சாலையில் பரவி வந்த மெனிங்கோகோகஸ் பற்றீரியா நோய் தொற்றுமுழுமையாககட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், வழக்கு விசாரணைகளுக்காக கைதிகளை நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்வது மற்றும் சிறைச்சாலைக்குள் புதியகைதிகளைஅனுமதிப்பதை தற்காலிகமாக இடைநிறுத்த பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

காலிசிறைச்சாலையில் அண்மையில் பரவிய பற்றீரியா தொற்று காரணமாக கைதிகள் இருவர் உயிரிழந்ததுடன் தொற்றுக்குள்ளான 16 பேர் அடையாளம்காணப்பட்டிருந்தனர்.

கைதிகளின் மரணத்துக்கான காரணம் கண்டறியப்படாத நிலையில் கராப்பிட்டிய வைத்தியசாலைக்கு விசேட வைத்தியர்கள் குழுவொன்று அனுப்பப்பட்டு பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், இந்த குழுவின் அறிக்கைகளுக்கு அமைவாககைதிகளிடையே மெனிங்கோகோகஸ் பற்றீரியாவால் ஏற்பட்ட நோய் தொற்று நிலைமை என உறுதி செய்யப்பட்டது.

காய்ச்சல், தலைவலி, கழுத்து வலி, குமட்டல், வாந்தி, சூரிய ஒளி உடலில் படுவதால் சிக்கல், உடலில் கடினத்தன்மை என்பன நோய்த் தொற்று அறிகுறிகளாகும்.

இந்நிலையில், தொற்றுக்குள்ளான 9 பேர் காலி கராப்பிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதுடன் இதில் இருவர் குணமடைந்து வைத்தியசாலையிலிருந்து வெளியேறியுள்ளனர்.

மேலும் 7 பேர் சிறைச்சாலையின் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

எவ்வாறாயினும்,சிறைச்சாலை பரவிய பக்டீரியா பரவல் முழுமையாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகசுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஹேமந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

பற்றீரியா மனித மூளையின் செயல்திறனை கடுமையாக பாதிக்கிறது. இதன் காரணமாக விரைவாக மரணம் சம்பவிக்கலாம். இது இலங்கையில் அரிதான நோயாகும். குறிப்பாக வெளிநாட்டில் இருந்து நாட்டுக்கு வருகை தந்த ஒருவரிடமிருந்து இந்த பற்றீரியா பரவியிருக்கலாம். எவ்வாறு சிறைச்சாலையில் தொற்று ஏற்பட்டது என்பது தொடர்பில் கண்டறியப்படவில்லை.

காலிசிறைச்சாலையில் சுமார் ஆயிரம் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இதில் பெரும்பாலானவர்கள்போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள். நோயெதிர்ப்பு குறைபாடு உள்ள தரப்பினர் மீது இந்த நோய் இலகுவில் பரவ வாய்ப்புகள்உள்ளன. குறித்த பற்றீரியா இதற்கு முன்னரும் புதிய மகசீன் சிறைச்சாலை, மஹர சிறைச்சாலைகளில் பரவியது. நாம் அதனை கட்டுப்படுத்தினோம்.

எனவே, பற்றீரியா தொடர்பில் வீணான அச்சம் கொள்ள தேவையில்லை. பற்றீரியா பரவல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. முடியுமான அளவு சுகாதார வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். முகக்கவசம் அணிவது, கையுறை அணிவது, தொற்றுக்குள்ளானவர்கள் தனிமைப்படுத்துவதுஎன்பன பின்பற்ற வேண்டும். கைதிகளை பார்வையிட வருகை தருவோர் போது சுகாதார ஆலோசனைகள் பின்பற்ற வேண்டும். - என்றார்.

(05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பேச்சுக்கும் செயலுக்குமான இடைவெளி

**ரணில் விக்கிரமசிங்க அரசுத் தலைவராகப் பதவியேற்றபோது அவரது உரைகளில் முக்கியமாக இடம்பெற்றது, பழைய அரசியல் பண்பாட்டிலிருந்து விலகி, ஒன்றிணைந்து புதிய இலங்கையைக் கட்டியெழுப்புவோம் என்கிற முழக்கம்தான். நாடு கெட்டுக் குட்டிச்சுவராகி, பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டு, கடனை மீளச்செலுத்த முடியாது முறிந்து போனமைக்கு இந்தப் பழைய அரசியல் பண்பாடே காரணம் என்று அவர் குற்றஞ்சாட்டினார். நாட்டை மீட்கவும் புதிய இலங்கையைக் கட்டியெழுப்பவும் இந்தப் பழைய அரசியல் பண்பாட்டுக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்றும் அழைப்பு விடுத்தார்.**

**அப்படி மீண்டும் மீண்டும் அறைகூவல்விடுத்த அரசுத் தலைவரின் ஆட்சியிலேயே, 40 ஆண்டுகள் கழித்து மீண்டும் இனக்கலவரங்கள் ஏற்படலாம் என்கிற அச்சம் எழும் சூழல் தோன்றியிருக்கின்றது. இதற்கு இடமளித்து, இனவாதிகளின் செயற்பாடுகளைக் கண்டும் காணாமலும் இருக்கும் அரசுத்தலைவரின் செயற்பாடு வெட்கக்கேடானது.**

**குருந்தூர்மலையை மையமாக வைத்து இந்த இனக் கலவரங்கள் தோற்றம் பெறலாம் என்று வெளிநாட்டுப் புலனாய்வு அமைப்புக்கள் எச்சரிக்கை விடுத்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் அந்தச் செய்திகளை மறுத்திருக்கிறார். அத்தகைய எச்சரிக்கைப் புனாய்வுத் தகவல்கள் எவையும் தமக்குக் கிடைக்கவில்லை என்று தெரிவித்திருக்கிறார். இருந்தாலும் வதந்திகளாகவேனும் இனக்கலவரம் தோற்றம் பெறலாம் என்கிற செய்திகள் உலவும் நிலைமையை அனுமதித்தமைக்காக ஆளும்தரப்புத் தலைகுனியவேண்டும்.**

**புலனாய்வுத் தகவல்கள் கிடைக்கவில்லையாயினும், குருந்தூர் மலையை மையப்படுத்தி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சரத் வீரசேகர, உதய கம்பன்பில, விமல் வீரவன்ஸ ஆகியோரும் மேர்வின் சில்வா போன்ற அரசியல்வாதிகளும் இனக்கலவரத்தை ஏற்படுத்த முயற்சிக்கிறார்கள் என்று வடக்கில் அரசியல் தலைவர்கள் பகிரங்கமாகவே குற்றஞ்சாட்டியிருக்கிறார்கள் என்பதை தட்டிக்கழித்துவிட முடியாது.**

**1983இல் நாட்டில் மிகப் பெரிய, ஆளும் தரப்பின் ஆதரவுடன்கூடிய இனக் கலவரம் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டதன் விளைவாகத் தோன்றிய ஆயுதப் போராட்டங்களால் நாடு சுமார் 30 ஆண்டுகள் ஒரு உள்நாட்டுப் போரை எதிர்கொண்டு அழிவுகளைச் சந்தித்த பின்னரும் மீண்டும் இனக்கலவரம் ஒன்று ஏற்படக்கூடும் என்கிற அச்சநிலை ஏற்படுவதை ஆளும் தரப்பு அனுமதிப்பது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல.**

**அது, அரசுத்தலைவர் ரணில் விக்கிரமசிங்க அறைகூவல் விடுத்த புதிய நாட்டுக்கான, புதிய அரசியல் பண்பாட்டுக்கான வழித்தடமும் அல்ல.**

**குருந்தூர்மலையில் சைவத் தமிழர்களும் வழிபடும் உரிமையை நீதிமன்றம் உறுதிப்படுத்திய பின்னர் முதல் தடவையிலேயே அதனை நிகழ்த்த காவல்துறையினர் போதிய ஏற்பாடுகளைச் செய்திருந்தால் இந்தப் பிரச்சினை இவ்வளவு பெரிதாக வளர்ந்திருக்காது. வடக்கு கிழக்குக்குச் சென்று தமிழர்களின் தலைகளைக் கொய்வது வருவேன் என்று மேர்வின் சில்வா எகத்தாளம் செய்தபோது அவரைக் கைது செய்திருந்தால் இதுபோன்ற தவறான எண்ணங்கள் பரவியிருக்காது.**

**குருந்தூர்மலையில் சைவத் தமிழர்களின் பொங்கல் வழிபாட்டைத் தடுத்துநிறுத்தவாருங்கள் என்று பிக்குவும் உதய கம்பன்பிலவும் விமல் வீரவன்ஸவும் அழைப்பு விடுத்தபோது அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால் இனக்கலவரம் குறித்த அச்சம் தோன்றியிராது. அப்படிப்பட்ட நடவடிக்கைகள் மக்களுக்கும் நாட்டுக்கும் மிக உறுதியான செய்தியையும் அரசுத் தலைவரிடம் இருந்து எடுத்துச் சென்றிருக்கும்.**

**அவற்றையெல்லாம் தவிர்த்து எந்தவித நடவடிக்கைகளும் எடுக்காமல் அரசுத் தலைவர் வாளவிருப்பது, எதிர்க் கட்சிகள் குற்றஞ்சாட்டுவதைப் போன்று, இதுபோன்ற இன உணர்வுகளைத் தூண்டிவிட்டுப் பயனடையும் உத்திதானோ என்று சந்தேகப்படவைப்பதைத் தடுக்க முடியவில்லை.**

# நிலவில் இந்தியா!

## வெற்றிப் பயணக் கதை




நிலவின் தென் துருவத்தில் முதன் முதலாக வெற்றிகரமாகத் தரையிறங்கியது சாதித்துள்ளது இந்தியா.

சந்திரயான் விண்கலத்தின் விக்ரம் உலாவி, நேற்று வெற்றிகரமாக நிலவின் தென் துருவத்தில் தரையிறங்கி நகரத் தொடங்கியுள்ளது.

விண்கலத்தின் லேண்டர்கலன் நிலவில் நேற்று வெற்றிகரமாக தரையிறங்கியது. இதன்மூலம் நிலவின் தென்துருவத்தில் தரையிறங்கிய முதல் நாடு எனும் புதிய சரித்திரத்தை பெற்று இந்தியா சாதனை படைத்துள்ளது.

இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (இஸ்ரோ) நிலவை ஆய்வுசெய்வதற்காக செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய சந்திரயான்-3 விண்கலத்தை சுமார் ரூ.250 கோடியில் (இந்திய மதிப்பு) வடிவமைத்தது. இது 3,895 கிலோ எடை கொண்டது. ஏற்கனவே சந்திரயான்-2 விண்கலத்தின் ஆர்பிட்டர், நிலவை சுற்றிவருவதால் இம்முறை விண்கலத்தில் லேண்டர் (தரையிறக்கி), ரோவர் (உலாவி) பாகங்கள் மட்டும் இடம்பெற்றன.

ஜூலை 14இல் தொடங்கிய பயணம்: சந்திரயான்-3 விண்கலம் எல்விஎம்-3 ராக்கெட் மூலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள ஏவுதளத்தில் இருந்து கடந்த ஜூலை 14 விண்ணில் செலுத்தப்பட்டது. தரையில் இருந்து புறப்பட்ட 16 நிமிடங்களில் திட்டமிட்ட புவி நீள்வட்ட சுற்றுப்பாதையில் விண்கலத்தை எல்விஎம்-3 வெற்றிகரமாக நிலைநிறுத்தியது.

ஓக..1 சந்திரயான்-3 புவியீர்ப்பு விசையில் இருந்து விலக்கப்பட்டு, நிலவை நோக்கி செல்லும்படி அதன் பயணப் பாதை மாற்றப்பட்டது. 5 நாள் பயணத்துக்குப் பிறகு ஓக. .5 நிலவின் ஈர்ப்பு விசைப்பகுதிக்குள் சந்திரயான் நுழைந்தது. அதன்பின் நிலவின் சுற்றுப்பாதையில் வலம்வந்த விண்கலத்தின் உயரம் படிப்படியாக குறைக்கப்பட்டு நிலவுக்கு அருகே விண்கலம் கொண்டு செல்லப்பட்டது. தொடர்ந்து சந்திரயானின் உந்துவிசை கலனில் இருந்து லேண்டர் ஓக..17 பிரிக்கப்பட்டது.

ஏற்கெனவே அறிவிக்கப்பட்டபடி, அனைத்துகட்ட முன்னேற்பாடுகளும் முடிக்கப்பட்டு சந்திரயான்-3 புதன்கிழமை மாலை நிலவில் தரையிறங்கத் தயாரானது. அதற்கான பணிகள் மாலை 5.44 மணிக்கு மேற்கொள்ளப்பட்டது. இந்த நிகழ்வு பெங்களூருவில் உள்ள இஸ்ரோவின் ஆய்வு மையத்தில் இருந்து நேரலையில் ஒளிபரப்பு செய்யப்பட்டன.

நிலவில் இருந்து 25கி.மீ. உயரத்துக்கு வந்தபோது, லேண்டரில் உள்ள செயற்கை நுண்ணறிவு திறன் கொண்ட கணினி வாயிலாக தரையிறங்குவதற்கான பணிகள் தொடங்கப்பட்டன. அப்போது லேண்டரின் வேகம் மணிக்கு 6,000 கி.மீ. என்ற அளவில் இருந்தது. எதிர்விசை நடைமுறையை பயன்படுத்தி அதன் வேகத்தை குறைக்கும் பணிகள் நடைபெற்றன. இதற்காக லேண்டரின் கால்பகுதியில் பொருத்தப்பட்டிருந்த 4 திரவ இயந்திரங்களும் சீரான நிலையில் சுமார் 10 நிமிடங்கள் இயக்கப்பட்டன. அதன்மூலம் விண்கலத்தின் வேகத்தை 1,200 கி.மீ அளவுக்கு குறைத்து லேண்டர் 7.4கி.மீ உயரத்துக்கு கொண்டு வரப்பட்டது.

இவ்வாறு லேண்டரின் வேகம் படிப்படியாக குறைக்கப்பட்டு தரையில் இருந்து 800 மீற்றர் உயரத்தை வந்தடைந்ததும், அதுவரை சாய்ந்தவாறு இருந்த விண்கலத்தின் கால்கள் தரையிறங்குவதற்கு ஏதுவாக செங்குத்தாக கீழ்நோக்கி நேராக திருப்பப்பட்டது.

அதேநேரம், லேண்டரில் உள்ள செயற்கை நுண்ணறிவு கணினி, விண்கலத்தில் உள்ள கேமரா மூலம் நிலவின் மேற்பரப்பை படம்பிடித்து சரியான இடத்தில் தரையிறங்குவதற்கான பாதையை உறுதிசெய்தது. அதன்பின் அந்தப்பாதையில் பயணத்தை தொடர்ந்த லேண்டர் தனது திரவ இயந்திரங்களின் விசையை குறைத்து 150 மீற்றர் உயரத்துக்கு வந்தது. இந்த கட்டத்துக்கு வந்ததும் லேண்டர் அப்படியே சிலவிநாடிகள் நிறுத்திவைக்கப்பட்டது. அப்போது நிலவின் ஈர்ப்பு விசையால் லேண்டர் கீழே இழுக்கப்படாமல் இருக்க அதன் கால்களில் உள்ள இயந்திரங்கள் மூலம் மேல்நோக்கிய தள்ளுவிசை கொடுக்கப்பட்டது.

சமதள பரப்பு ஆய்வு: இந்த சூழலில், விண்கலத்தில் இருந்த 'இடர் உணர் ஆபத்து தவிர்ப்பு கேமரா' உதவியால், தரையிறங்க வேண்டிய பகுதியை ஆராய்ந்து, அதில் பாதுகாப்பான ஒரு சமதள பரப்பு தேர்வு செய்யப்பட்டது. அதன்பின் 150 மீற்றரில் இருந்து 60 மீற்றர் உயரத்துக்கு லேண்டர் இறக்கப்பட்டது. அதில் இருந்த லேசர் டாப்ளர் வெலாசிட்டி சென்சார் வாயிலாக விண்கலம் எவ்வளவு வேகத்தில் கீழ்நோக்கிச் செல்கிறது என்பதையும் கணக்கிட்டு தரையிறங்க ஏதுவான வேகமும் கட்டுக்குள் வைக்கப்பட்டது.

அடுத்ததாக லேண்டர் 10 மீற்றர் உயரத்துக்கு கொண்டு வரப்பட்டதும், நிலவின் மேற்பரப்பில் இருந்து புழுதி மேல் எழும்புவதை தவிர்க்க, திரவ இயந்திரங்களின் இயக்கம் நிறுத்தப்பட்டது. மிகவும் பரபரப்பான அபாயக் கட்டத்தை கடந்து, மாலை 6.04 மணிக்கு நிலவின் தென்துருவத்துக்கு அருகே மான்சினஸ் சி மற்றும் போகுஸ்லாவ்ஸ்கி பள்ளங்களுக்கு இடையே லேண்டர் வெற்றிகரமாக தரையிறங்கியது.

அடுத்தசில நிமிடங்களில், 'நான் இலக்கை அடைந்து விட்டேன்.. நீங்களும்தான்' என்று இஸ்ரோவுக்கு லேண்டர் குறுஞ்செய்தி அனுப்பியதும் இஸ்ரோ விஞ்ஞானிகள் உட்பட ஒட்டுமொத்த நாடும் மகிழ்ச்சியில் ஆர்ப்பரித்தது.

நிலவின் தரையிலிருந்து வெறும் 150 மீட்டர் உயரத்தில் இருந்தபோது, கீழே இடர்நிலை உள்ளது என்பதைத் தரையிறங்குக் கலம் கவனித்தது. அந்த நேரம் அனைவருக்கும் 'திக் திக்' நிமிடங்களாகக் கடந்தது. அந்நிலையில், அதன் இடரை உணர்ந்து ஆபத்தைத் தவிர்க்கும் செயற்கை நுண்ணறிவு மென்பொருள் சட்டென்று செயல்பட்டு, அருகே பாதுகாப்பான இடத்தை அடையாளம் கண்டது. அதனால் தரையிறங்குக் கலம் பக்கவாட்டில் நகர்ந்து பாதுகாப்பாக அங்கே தரையிறங்கியது.

அடுத்து என்ன? நிலவின் தென் துருவப் பகுதியில் சூரிய ஒளி தெரியும் பகல் பொழுதில், வெப்பம் சுமார் 54 டிகிரி இருக்கும். சூரியன் மறைந்து இரவு கவிழும்போது வெப்பம் தடாலெனக் குறைந்து மைனஸ் 200 என்ற உறைபனிக் குளிர் ஏற்படும்.

சந்திரயான் கலங்களில் உள்ள மின்னணுக் கருவிகள் அந்தக் கடும் குளிரைத் தாங்காது. எனவே, நிலவின் பகல் பொழுதில் மட்டுமே கருவிகள் செயல்படும். அதன் பின்னர் தரையிறங்கிக் கலம், உலாவிக் கலம் ஆகியவற்றின் ஆயுள் முடிந்துவிடும். நிலவின் ஒரு நாள் என்பது 14 பூமி நாள்களுக்குச் சமம். எனவே, தரையிறங்கிக் கலம், உலாவிக் கலத்தின் ஆயுள் 14 நாள்கள்.

தரையிறங்கும் தொழில்நுட்பம்: விமான இறக்கை, ஹெலிகாப்டர் விசிறி, பாராசூட் முதலியவற்றைப் பயன்படுத்தி பூமியில் மென்மையாகத் தரையிறங்க முடியும். காற்றே இல்லாத நிலவில் இந்த மூன்றும் பயன் தராது. எனவேதான் ஆற்றலளித்துத் தரையிறக்கும் (ஸ்ரீலிழளஷள--ளவிஉளஜமி) நுட்பத்தை நிலவில் பயன்படுத்த வேண்டும்.

ராக்கெட் உயர் அழுத்தப் புகை வெளிப்படும் திசைக்கு எதிராகத் தள்ளு விசை ஏற்படும். எனவே, கீழே விழும் விண்கலம் கீழ்நோக்கி ராக்கெட்டை இயக்கினால் மேல் நோக்கிய தள்ளுவிசை கிடைக்கும். கீழ்நோக்கிய ஈர்ப்புவிசை, மேல்நோக்கிய ராக்கெட் தள்ளுவிசை இரண்டின் விளைவாக விண்கலத்தை அந்தரத்தில் நிறுத்தலாம்; அல்லது மெதுவாகக் கீழே இறங்கச்செய்யலாம். இதுவே ஆற்றலளித்துத் தரையிறக்கும் நுட்பம்.

கீழ்நோக்கிய விசைக்கு ஈடுகட்டும் வகையில் மேல்நோக்கிய தள்ளுவிசையை உருவாக்க வேண்டும். அதற்கு ராக்கெட் இன்ஜின் செயல்பாட்டைக் கூட்டிக் குறைக்கவேண்டும். இதற்கான செயற்கை நுண்ணறிவுப் பொறியைத் தயார் செய்யவேண்டும். இதுபோல வழித்தடம் காணும் செயற்கை நுண்ணறிவுப் பொறி, இடர் உணர்ந்து ஆபத்தைத் தவிர்க்கும் செயற்கை நுண்ணறிவுப் பொறி, விண்கலத்தை இயக்குவதற்கு செலுத்திப் பொறி முதலியவற்றை இந்திய விஞ்ஞானிகள் தயார் செய்துள்ளனர். இந்த செயற்கை நுண்ணறிவுப் பொறிகள் சிறப்பாகச் செயல்படுகின்றன என சந்திரயான் 3 வெற்றி எடுத்துக்காட்டுகிறது.

2019 ஓகஸ்ட் 20 அன்று நிலவின் சுற்றுப்பாதையை அடைந்த சந்திரயான் 2 இன்றும் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இதன் சுற்றுப்பாதைக் கலத்தில் பொருத்தப்பட்டிருந்த தொலையுணர்வுக் கருவியைக் கொண்டு நிலவின் தரைப்பரப்பில் உள்ள தாதுப்பொருள்கள் இனம்காணப்பட்டுப் பட்டியலிடப்பட்டுள்ளன.

ஒருபானைச்சோற்றுக்கு ஒருசோறுபதம் என்பதுபோலத் தொலையுணர்வு வழியே அறியப்பட்ட தரவுகள் உண்மைதானா என உலாவிக் கலத்தில் பொருத்தப்பட்டுள்ள ஆல்பா துகள் எக்ஸ்ரே நிறமாலைமானி (Alpha Particle X-ray Spectrometer – APXS), லேசர்தூண்டுதலுடன் சிதைக்கும் நிறமாலை மானி (Laser Induced Break-down Spectroscope - LIBS) கருவிகளைக் கொண்டு ஆய்வுசெய்யும்.

தொலையுணர்வு வழியே இனம் கண்ட அதே தாதுப் பொருள்களை உலாவிக் கலமும் இனம் கண்டால், சுற்றுப்பாதைக் கலம் அளிக்கும் தரவுகள் மீது கூடுதல் உறுதித்தன்மை ஏற்படும். இதுதான் முக்கியத் திட்டம். உலாவிக் கலம் பல்வேறு பகுதிகளுக்குச் சென்று தரவுகளைத் திரட்ட முடியும் என்பதால், மேலும் நம்பிக்கை தரும்.

பூமியின் மேற்புற ஓடு சில்லு சில்லாக உடைந்து ஒன்றுடன் ஒன்று மோதிய படியே உள்ளது. 'டெக்டானிக் சில்லுகள்' எனப்படும் இந்தப் பகுதிகள் மோதி உரசும் இடங்களில்தான் நிலநடுக்கம், எரிமலை போன்றவை பூமியில் உருவாகும்.

உலரும் திராட்சைப் பழத்தோலின் மீது சுருக்கம் ஏற்படுவதுபோல, நிலவு குளிரக்குளிர அதன் மேற்புறத்திலும் சுருக்கம் ஏற்படுகிறது. இந்தநிகழ்வின் தொடர்ச்சியாக நிலவிலும் நிலநடுக்கம் ஏற்படுகிறது. நிலவின் நடுக்கங்களை உணர்ந்து ஆராய்ச்சி செய்ய தரையிறங்கிக் கலத்தில் நிலவு நடுக்க ஆய்வுக் கருவி (Instrument for Lunar Seismic Activity - ILSA) பொருத்தப்பட்டுள்ளது.

உலோகம் வெப்பத்தைக் கடத்தும் அதே வகையில் மரத்துண்டு கடத்தாது; அதனால்தான் மரத்துண்டைக் கொண்டு சமையல் கரண்டி கைப்பிடியைச் செய்கிறோம். சந்திரா தரைப்பரப்பு வெப்ப இயற்பியல் ஆய்வு (Chandra's Surface Thermo-physical Experiment – ChaSTE) எனும் ஆய்வுக் கருவியை வைத்து, நிலவு மண்ணின் வெப்பக் கடத்துத்திறன் அளவிடப்படும்.

பூமியின் மீது திட, திரவ, வாயு என்ற மூன்று நிலைகளில் பொருள்கள் உள்ளன. மின்னல் போன்ற அரிதான வகைகளில் மட்டுமே நான்காவது நிலையான பிளாஸ்மா நிலையில் பொருள்களைப் பூமியில் காணலாம். ஆனால், சூரியக் கதிர்களின் தாக்கத்தில் நிலவின் மேற்புறத்தில் தோல்போல பிளாஸ்மா அடுக்கு உள்ளது. நிலவின் தரைப்பரப்பின் அருகே பிளாஸ்மா நிலையில் உள்ள பொருள்களை 'ரம்பா' கருவி (Radio Anatomy of Moon Bound Hypersensitive ionosphere and Atmosphere – RAMBHA) ஆராயும்.

மேலும் பூமியிலிருந்து அனுப்பப்படும் லேசர் கதிர்களைத் தரையிறங்கிக் கலத்தில் பொருத்தப்பட்டுள்ள லேசர்பிரதிபலிப்புக்கண்ணாடி (Laser Retroreflector Array - LRA) பிரதிபலித்துத் திருப்பும். லேசர்ஒளி சென்றுவர எடுக்கும் காலம் அளக்கப்பட்டு, நிலவின் தொலைவு மிகத்துல்லியமாக ஆய்வு செய்யப்படும்.

நிலவின் இயக்கங்கள், ஈர்ப்பு விசைகுறித்த தத்துவ ஆய்வுகள் எனப் பல மேலதிக ஆய்வுகள் இந்தத் தரவுகளைக் கொண்டு மேற்கொள்ளப்படும். ஒட்டுமொத்தமாக விண்வெளி சார்ந்த ஆய்வில் இந்தியா அடுத்த கட்டப் பாய்ச்சலுக்குத் தயாராகிவிட்டதை, சந்திரயான் 3 வெற்றி உறுதிப்படுத்தியிருக்கிறது.

இந்த வெற்றியின் மூலம் அமெரிக்கா, ரஷ்யா, சீனா ஆகிய நாடுகளுக்கு பிறகு, நிலவில் விண்கலத்தை தரையிறக்கிய 4ஆவது நாடு மற்றும் தென் துருவத்துக்கு சென்ற முதல் நாடு என்ற பெருமையை இந்தியா பெற்று புதிய சகாப்தம் படைத்துள்ளது.

பூமிக்கும், நிலவுக்கும் இடையே உள்ள 3.84 லட்சம் கி.மீ. தூரத்தை சந்திரயான்-3 விண்கலம் 41 நாட்களில் சென்றடைந்துள்ளது. நிலவில் ஹீலியம் போன்ற வாயு மூலக்கூறுகள், நிலவு உருவான விதம், பனிக்கட்டிகளின் நிலை, தனிமங்கள் பற்றிய தகவல்களை ஆய்வுசெய்வதே இத்திட்டத்தின் முக்கிய பணியாகும்.

லேண்டரில் இருந்து ரோவர் வாகனம் வெளியேறியிருக்கிறது. இது நிலவில் ஆராய்ச்சியை மேற்கொள்ளும் என்று இஸ்ரோ விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

லேண்டர், ரோவர் வழங்க உள்ள அரிய தகவல்கள் மூலம் நிலவு பற்றிய பல்வேறு தகவல்கள் தெரியவரும் என்று அறிவியல் ஆர்வலர்கள் நம்பிக்கை தெரிவித்தனர்.

கிளிநொச்சியில்

# ஐஸ்வர்யம் பெருவிருந்து மண்டபம்

# Ishwaryam Banquet Hall





Tel:- 021 228 3701, 071 7354308

Whatsapp:- 071 7736 4308

No.315, Kandy Road,
Kilinochchi




சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL

## BANQUET MEALS HALL





**FULL OPTION**

**MAIN DIHES**

Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable In Indian Style

**DESSERT**

| | |
|---|---|
| Ice Cream Cup | - 60/= |
| Fruit Salad | - 60/= |
| I ce Cream & Fruit Salad | - 100/= |
| Cream Caramel | - 120/= |

**SPECIAL MENU PACKAGE**

**BEVERAGES**


| | |
|---|---|
| JUICE 200 ml | - 70/= |
| Milk Drink | - 70/= |
| Cocacola M | - 70/= |
| Pepsi M | - 70/= |
| Swohpoos Tin | - 250/= |
| Coca Cola Tin | - 250/= |

காலைக்கதிர் Kalaikkathir

உ
முருகன் துணை.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

# செவ்வழி நயனம்



# ஒழுக்கம்

'ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' என்கிறார் திருவள்ளுவர்.

ஒரு மனிதனது வாழ்க்கையில் ஒழுக்கம் அவனது உயர்வுக்கு காரணமாக இருக்கிறது ஆதலால் தான் வாழ்வில் ஒழுக்கம் உயிரை விட மேலானதாக பார்க்கப்படுகிறது. ஒழுக்கம் தவறியவர்கள் வாழ்வில் உயரமுடியாது மாறாக துன்பங்களையே சந்திக்க நேரிடும். இதனை கல்வியே நமக்கு போதிக்கின்றது. அதாவது ஒழுக்கத்தை தராத கல்வியும்விளைச்சலைதராத வயலும் வீணானது என்று கூறுவார்கள். கல்வியின் பயன் அறிவுஇ அறிவின் பயன் ஒழுக்கம் இவ்வாறு மனிதர்கள்வாழ்வில்ஒழுக்க சீலர்களாகவாழவேண்டியது வலியுறுத்தப்படுகிறது.

நமது வாழ்க்கையில் புயல்போல எழும் மன சஞ்சலங்களை எவரெல்லாம் அடக்கியாள கற்றுக் கொள்கின்றார்களோ அவர்களே பின்னாளில் சிறந்த மனிதர்களாக மாறுவார்கள். இதனால் தான் தனி மனித ஒழுக்கம் என்பது மனிதர்களுக்கு அவசியம் என போதிக்கப்படுகிறது. ஒழுக்கத்தை ஒவ்வொருவரும் விரும்பி ஏற்றுக்கொள்ளவேண்டும். அதுவே அவர்களது வாழ்க்கையில் முன்னேற அவர்களுக்கு துணையாக அமையும்.ஒழுக்கம் தவறி ஒருவர் வாழ்வார் ஆயின் அது அவருடைய குடிப்பிறப்பையே அசிங்கப்படுத்தி விடும் என்பதால் நம் முன்னோர்கள்ஒழுக்கம்தவறாமல் வாழ்ந்தனர்.

ஒழுக்கம் உடைய ஒரு மனிதனுடைய மனதில் நல்லெண்ணங்கள் இருக்கும் நல்ல குணங்கள் வாய்க்க பெறும் சக மனிதர்களின் அன்பும் மரியாதையும் அவனுக்கு கிடைக்கபெறும். ஆகவே தான் ஒரு மனிதனுக்கு செல்வங்களை விட ஒழுக்கம் என்பது விலைமதிப்பற்றதாக சொல்லப்படுகிறது.

'ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின் எய்துவர் எய்தாப் பழி' என்று திருக்குறள் கூறுகிறது.

அதாவது ஒழுக்க நெறி நிற்பவர்கள் என்றைக்கும் உயர்நிலையை அடைவார்கள் என்பது தெய்வ வாக்காகும். உதாரணமாக நேர்மையான வழியில் கடினமாக உழைத்து வாழ்வில் முன்னேறியவர்கள் வாழ்க்கையில் நிலையான முன்னேற்றம் காண்பார்கள் மாறாக தவறான வழியில் முன்னேற நினைப்பவர்கள் அவற்றை இழந்து துன்பமடைவார்கள் என்பது இயற்கை. வறுமையான நிலையிலும்நல்லொழுக்கம் தவறாதுகல்விகற்றுஉயர்ந்த பல தலைவர்களை நாம் பார்த்திருக்கின்றோம்.

ஒரு செருப்பு தைக்கும் தொழிலாழியின் மகனான ஆபிரகாம் லிங்கன் அமெரிக்காவின் ஜனாதிபதியாக உயர காரணம் அவரது கடின உழைப்பும் அவரது நேர்மையும்ஆகும்.இவ்வாறு தமது சுய ஒழுக்கத்தால் முன்னேறியவர்கள் ஏராளமானவர்கள் உள்ளனர். பத்திரிகை போடும் சிறுவன் பின்னாளில் உலகம் போற்றும் விஞ்ஞானி ஆகியமை என பல மனிதர்களை தனி மனித ஒழுக்கம் வாழ்க்கையில் பெரிய உயரத்திற்கு கொண்டு சென்றிருக்கிறது.

'நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம் என்றும் இடும்பை தரும்' என்கிறார் வள்ளுவர்.

நல்லொழுக்கம் ஆனது ஒரு மனிதனை எவ்வாறு பெரியஉயரத்துக்குகொண்டு போய்சேர்க்கிறதோ அதனை போலவே தீய வழியில் நடப்பவர்கள் என்றும் முன்னேறாமல் துன்பங்களை அனுபவிப்பார்கள் என்பது பொய்யாமொழி. தீய ஒழுக்கம் சிறிது காலத்துக்கு இனிப்பாகவே இருக்கும் ஆனால் பின்னாளில் அது பெரும் துன்பத்தை தரும் இதனையே 'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்' என்று கூறுவார்கள்.

ஆகவே நாமும் தீய வழியில் செல்லாது நம்மை சுற்றியிருப்பவர்களையும் நல்வழியையும் நல்லொழுக்கத்தையும் கூறி வழிப்படுத்துதல் சால சிறந்ததாகும். அன்று தொட்டு இன்று வரை ஒழுக்கமே சிறந்தது என ஒழுகி வரும் இனம்சார்ந்தநாம்எப்போதும் நம்மை உயர்த்த கூடிய ஒழுக்க நெறி நின்று இவ்வையத்துள் வாழ்வாங்கு வாழவேண்டும்.இன்றைக்கு ஒழுக்கமற்ற சமுதாயம் அதிகரித்து செல்வது மன வருத்தத்திற்கு உரியதாகும். இவற்றினால் எமது சமூகம் சீரழிந்தே செல்கிறது. இதை தடுக்க நல்வழியை உணர்ந்துஒழுக்கசீலர்களாக வாழ்வோம் மற்றவர்களுக்கும் முன்னுதாரணமாக இருப்போம் இதுவே எல்லார்க்கும்நன்மைபயப்பதாக அமையும்.

**தெய்வேந்திரம் வஜிதா**



# பல்லூரும் போற்றும் நல்லூர்ப் பெருவிழா

நல்லூர் எம்மானுக்கு
நலம் திகழ் கொடியேற்றம்
வல்ல வேற்பெருமான்
வலம்வரும் திருக்கோலம்
கல்லையும் கசியச்செய்
கலை நிறை திருக்காட்சி
பல்லூரும் புகழ் நல்லூர்ப்
பரமனின் பெருவிழா (1)

வேத கோம் ஓங்க
வெற்றிச் சங்கம் ஒலிக்க
நாதஸ்வரம் இசைக்க
நல்ல தமிழ் மணக்க
பாதகம் தீர்க்கும் மணலில்
பாலகர்கள் விளையாட
ஆதிப்பிரான் அழகு அருட்
கோலம் காட்டும் விழா (2)

மடங்களிலெலாம் அன்னம்
மனங்களில் முருக நாமம்
கடம் வயலின் மிருதங்கம்
கவின் பாடல் உரைநயம்
நடனம் இவற்றின் ஓசை
நாற்றிசையும் கேட்கும் -தேர்
வடம் பிடிக்கவென்றே புலம்
பெயர்ந்தோரும் வந்திடுவர் (3)

குடை கொடி ஆலவட்டம்
கோலாகல செவ்வண்ணப்
படை இவை சேரப் பிரான்
பல வகை வாகனங்களிலே
நடையழகு காட்டுகையில்
நம் கைகள் மேல் உயரும்
தடை மறந்து கண்களில்
தாரையாய் நீர் வடியும் (4)

நீற்றழகு சேரும் பக்தர்
நிமிர்வுறும் குரு மரபு
காற்றிலே கலந்து வந்து
காதிலே சேரும் கானம்
தோற்றத்தில் எளியராக
தோன்றுகின்ற எஜமானர்
ஏற்றமே சேர் பிரசன்ன
எம்மவர் குரலிசை (5)

பஜனையின் ஒலியும்
பாத யாத்திரைப் பண்பும்
நிஜம் குஹன் என்றே
நிலத்திலே சொல்லும்:
கஜம் மயில் கடாவிலும்
ஹம்ஸம் ரதத்திலும்
கஜமஹா வல்லி சேர
கந்தனார் வரும் காட்சி (6)

ஹோமத்து புகை எழும்பும்
கோயில் மணி ஒலிக்கும்
நாம சஹஸ்ரம் சொல்லி
நல்ல அர்ச்சனை நடக்கும்
சேமக்கலத்தொடு சங்கு
சேர்ந்திசைத்திடவே சுவாமி
பூமாரி சொரிய வரும்
புண்ணியத் திருக்கோலம் (7)

மங்கையர்க்கு அழகு சேரும்
மழலையர் உற்சாகம் கூடும்
சிங்க நடை இளைஞர் எல்லாம்
சிரித்திட: வயோதிபரும்
இங்கு நமக்கு இளமை
இனி வரும் என்று உவக்கும்
எங்கள் மண்ணின் விழா
எழில் நல்லூர் திருவிழா (8)

கச்சான் கடை வைப்பவரும்
கற்பூரம் விற்பவரும்
இச்சையாக பல்தொழிலரும்
ஏற்றம் பெறும் காலம்: இது
உச்சமாக மாநகர சபையும்
உழைத்திடும் பல இலட்சம்
நிச்சயம் சுய தொழிலூக்கம்
நிகழ்த்திடும் திருவிழா (9)

காவடிகள் ஆட்டமும் கவின்
கற்பூரச்சட்டி பால்குடமும்
சேவடி நினைத்தோர் சீராய்
செய் புராண படனமும்
பூவடியே சிந்தித்துப் அங்க
பிரதட்டை செய்வோரும்
தேவ தேவன் கோயிலில்
தெய்வீகம் தனை கூட்டும் (10)

தொலைக்காட்சி வானொலிகள்
தொகையாக யூற்றியூப் சனல்
அலை வழி கவர் பண்ணி
அற்புத காட்சி பரப்பிடவே
கலை நிறை காட்சி என
கண்டவர் மிக நெகிழ
தலைவன் கோயில் விழாவை
தரணியே கொண்டாடும் (11)

மந்திர குறையும் கிரியை
மரபிலே தவறும் இன்னும்
அந்தரங்கப் பக்தியிலே
அடியர் நாம் செய் பிழையும்
இந்த குறை எலாம் நீக்கி
இனிய மயிலேறி விரைந்து
வந்துடன் காத்தல் வேண்டும்!
வடி வேல் உடைய அரசே! (12)

மெருகு சேர் சப்பரத்தில்
மேவிடும் முருகன் அழகை
தருமை முனிவரும் கண்டு
தமிழிலே ஏத்திப் போற்ற
பெருமை தண்ணீர்ப்பந்தல்
கூட
நூற்றாண்டு விழா காண
வரும் திரு மேவும் விழா
வணங்கியே வாழ்வோம் நாமே
(13)

கலைக்கூடல் முயற்சியாலே
கவினுறு இளையோர் வாழ்வில்
நிலை நிமிர்ந்து சைவத்தமிழ்
நிகரிலா பண்பாடு உயரும்:
இலை மறை காயாய் எங்கும்
இலங்கு ஆளுமை வெளிப்படத்
தலை நிமிர்ந்து நாமும் இங்கே
தகவுடன் வாழப் போறோம் (14)

குற்றமே செய்யும் போதும்
குணமொன்றே கண்டிரங்கி
நற்றவத்தர் எனக் கருதி
நம்மை நீ காக்க வேண்டும்
பற்பல சொல்வானேன்:
பகவ! நீ அறியாததுண்டோ?
உற்ற துணையாகி காப்பாய்
உயர் நல்லைப்பதி வாழ்வே!
(15)

கொடி உனக்கேறும் போது
குற்றங்கள் அகல வேண்டும்
அடியரின் வாழ்வில் இன்ப
அமைதியே தோன்ற வேண்டும்
நெடிய வேல் எழும் போது
நோய் பிணி ஓட வேண்டும்
கடிதினில் மயூரமேறி எம்
கடவுளே வருதல் வேண்டும்!
(16)

**தி.மயூரகிரி சிவாச்சார்யார்**

# இலக்குமி சிரிப்பாள் இல்லம் அனைத்தும் மங்கலமே !





வாழ்வினில் விரதம் வரமாகும்
மனமது ஒடுங்குதல் நலமாகும்
தேவைகள் மனதில் எழும்போது
தேவியை நினைப்பார் நிலமீது

தேவியை நினைப்பார் பலவாறு
தினமுமே துதிப்பார் பலபேரும்
சிறப்புடன் எடுப்பார் சிலநாளை
அதனை அகத்தினில் அமர்த்திடுவார்

அப்படி அமைவது இவ்விரதம்
அதுவே அலைமகள் தினமாகும்
மங்களம் கிடைக்க யாவருமே
அலைமகள் விரதம் அனுட்டிப்பார்

மங்கள நாயகி வரலக்சுமி
வளமினை கொடுப்பாள் வரலக்சுமி
எங்களின் வாழ்வு விடிவுறவே
என்றுமே அவளே துணையாவாள்

தளர்வினைத் தகர்க்கும் தாயாவாள்
உளமதை உறுதி ஆக்கிடுவாள்
நிலமதில் நிம்மதி தந்திடுவாள்
அளவிலாச் சக்தியும் அவளாவாள்

செல்வம் என்பது சிறப்பாகும்
தெய்வம் தந்தால் அருளாகும்
தெய்வமாம் லக்சுமி பூஜையினை
சிரத்தையாய் செய்குவார் இந்நாளில்

அலைமகள் கலைமகள் மலைமகளாய்
அமைந்தவள் ஆதிசக்தி யாவாள்
அலைமகள் அருளும் அமைந்திட்டால்
அனைத்துமே வசமாய் ஆகிடுமே

வீட்டினில் பெண்கள் விளக்கேற்றி
மெய்யன்புடனே துதி பாடி
இலக்குமித் தாயை மனமிருத்தி
ஏற்றிடு வார்கள் விரதமதை

காப்புக் கட்டி நின்றிடுவார்
கையால் குங்கும் தொட்டிடுவார்
மஞ்சள் வைத்து பூஜிப்பார்
மங்கலம் என்றே மகிழ்ந்திடுவார்


பெண்களே சிறப்பாய் பிடித்திடுவார்
பீடுகள் பெருக வேண்டிடுவார்
கொண்டவர் நலத்தை மனமிருத்தி
பெண்களே விரதம் நோற்றிடுவார்

மாங்கல்யம் நிலைக்க வேண்டிடுவார்
மனமது சிறக்க வேண்டிடுவார்
வாழ்வெலாம் ஒளிர வேண்டிடுவார்
வரலக்சுமி பாதம் பணிந்திடுவார்

அம்மன் ஆலயம் அனைத்திலுமே
அபிசேகம் ஓமம் இடம்பெறுமே
அனைத்துப் பெண்களும் ஆலயத்தில்
அம்மனைத் துதிப்பார் காதலுடன்

பூஜை நிறைவில் பெண்களெலாம்
புனித நூலைக் காப்பாக
கைகளில் கட்டி காத்திடுவார்
கணவர் குடும்பம் நலன்காக்க

வீடுகள் விளக்கால் ஒளியாகும்
வெற்றிகள் வரவு விரைவாகும்
இலக்குமித் தேவி சிரித்திடுவாள்
இல்லம் அனைத்தும் மங்கலமே





**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண் , ஆஸ்திரேலியா

# குருந்தூர் மலை விவகாரம் கலவரத்தை தோற்றுவிக்கும்

## அரசின் நிலைப்பாடு என்ன என வேலுகுமார் கேள்வி

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பில் பயிற்சி பெற்றவர் நாட்டில் உள்ளார் என அரசாங்கத்தின் பொறுப்பு வாய்ந்த ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

குருந்தூர் மலை விவகாரம் இலங்கையில் மீண்டும் இனவாத கலவரத்தை தோற்றுவிக்கும் என இந்திய புலனாய்வு பிரிவினர் இலங்கைக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

ஆட்சியதிகாரத்தை கைப்பற்ற மக்களை பலியாக்க வேண்டாம் என்பதை தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற ஏற்றுமதி மற்றும் இறக்குமதி ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

வங்குரோத்து நிலையில் இருந்து மீட்சியடையும் திட்டத்தில் வெளிநாட்டு முதலீடுகள் முக்கியமானதாக உள்ளது. கொழும்பு துறைமுக நகர திட்டம் முக்கிய வெளிநாட்டு முதலீட்டுத் திட்டமாகக் காணப்படுகிறது.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ள நிலையில் இனவாதம் மற்றும் மதவாத கருத்துக்களும் வெளிப்படைத் தன்மையாகத் தோற்றம் பெற்றுள்ளன.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் மற்றும் 13 பிளஸ் என்று குறிப்பிட்டுக் கொண்டு ஜனாதிபதி கருத்து முரண்பாடுகளைத் தோற்றுவித்துள்ள நிலையில் குருந்தூர் மலை சிவன் ஆலயமா? அல்லது பௌத்த விகாரையா ?என்ற முரண்பாடு தோற்றம் பெற்றுள்ளது.

மறுபுறம் கிழக்கு மாகாணத்தில் மயிலத்தமடு, மாதவனை பகுதியில் சர்வமத தலைவர்கள் தடுத்து வைக்கப்பட்டு அங்கும் பிரச்சினை தோற்றம் பெற்றுள்ளது. மலையகத்தில் 1983 ஆம் ஆண்டு கால சூழலை போல் தமிழ் குடும்பம் அடாவடித்தனமாக வெளியேற்றப்பட்டுள்ளது.

சிரியாவின் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பில் பயிற்சிப் பெற்றவர்கள் நாட்டில் உள்ளார்கள் என அரசாங்கத்தின் பொறுப்பு வாய்ந்த தரப்பினர் என குறிப்பிடுகிறார்.

இவ்வாறான பின்னணியில் வெளிநாட்டு முதலீட்டாளர்கள்,சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு எவ்வாறு வருகை தருவார்கள்.

குருந்தூர் மலை விவகாரத்தை தொடர்ந்து இலங்கையில் மீண்டும் இனவாத முரண்பாடுகள் தோற்றம் பெறும் சாத்தியம் காணப்படுவதாக இந்திய புலனாய்வு தரப்பினர் எச்சரிக்கை விடுத்துள்ளார்கள்.

இவ்வாறான சூழலில் எவ்வாறு வெளிநாட்டு முதலீட்டுகளை பெற்றுக்கொள்ள முடியும். சுற்றுலாத்துறையை மேம்படுத்த முடியும். இன்றும் நாடு வங்குரோத்து நிலையில் இருந்து மீளவில்லை.

மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக ஒரு தரப்பினர் இனவாதம் மற்றும் மதவாத வெறுப்பு



பேச்சுக்களைக் கட்டவிழ்த்து விட்டுள்ளார்கள். இந்த விடயம் தொடர்பாக அரசாங்கம் விசேட கவனம் செலுத்த வேண்டும்.

இந்த விடயம் தொடர்பாக அரசாங்கம் தனது நிலைப்பாட்டை அறிவிக்கவில்லை. அதிகாரத்தைக் கைப்பற்ற மக்களை பலியாக்க வேண்டாம் என்பதை வலியுறுத்துகிறேன். - என்றார்.

# கொரோனா சடலங்களை எரிப்பதற்கு எடுத்த தீர்மானம் தொடர்பில் விசாரணை செய்வேன்

## சபையில் ஹக்கீமுக்கு அமைச்சர் கெஹலிய பதில்

கொவிட் தொழிநுட்ப குழுவின் நடவடிக்கைகள் மற்றும் அதன் தீர்மானங்கள் தொடர்பாக விசாரணை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்து வருகிறேன்.

அதன் பிரகாரம் கொவிட் தொற்றில் மரணித்தவர்களின் சடலங்களை எரிப்பதற்கு எடுத்த தீர்மானம் தொடர்பாகவும் ஆராய்ந்து அது தொடர்பான அறிக்கையை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிப்பேன் என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது ரவூப் ஹக்கீம் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

ரவூப் ஹக்கீம் எம்.பி. தெரிவிக்கையில் -

கொவிட் தொற்றில் மரணித்த முஸ்லிம்களின் சடலங்களை எரிப்பதற்கு எடுத்தபிழையானநடவடிக்கை தொடர்பில் அரசாங்கம் மன்னிப்பு கேட்கலாம்தானே.

மஹிந்த ராஜபக்ஷ பிரதமராக அன்று இருக்கும்போது இந்த விடயங்கள் பரிசீலிக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்திருந்தார். சடலங்களை எரிப்பதற்கு விஞ்ஞான ரீதியில் எந்த ஆதாரமும் இருக்கவில்லை.

எந்த நாடும் இந்த நட வடிக்கையைப் பின் தொடரவில்லை. மக்களின் மத உணர்வுகளுக்கு எதிராகவே இந்த விடயம் இடம் பெற்றிருக்கிறது.

எனவே கொவிட் சடலம் எரிப்பு நடவடிக்கை வெறுப்பு நடவடிக்கையாகவே மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் சிலர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். எனவே, சுகாதார அமைச்சர் என்றவகையில் இந்த நடவடிக்கைக்கு ஏன் பகிரங்கமாக மன்னிப்பு கோர முடியாது? என்றார்.

அதற்கு அமைச்சர் தொடர்ந்து பதிலளிக்கையில், கொவிட் சடலங்கள்



எரிக்கப்பட்டமைக்காக எங்களுக்கு மன்னிப்பு கேட்க முடியும். அதில் பிரச்சினை இல்லை.

ஆனால் இந்தத் தீர்மானத்துக்கான காரணம் என்ன? யார் பிழை செய்தது எனத் தேடிப்பார்க்க வேண்டி இருக்கிறது. சர்வதேசமாகவும் இருக்கலாம் வேறு யாராகவும் இருக்கலாம்.

என்றாலும் சடலங்கள் எரிக்கப்பட்ட விடயத்தை நானும் மிகவும் உணர்வுபூர்வமான விடயம். அதனால் இது தொடர்பாக ஆராய்ந்து, இது தொடர்பாக மேலுமொரு குழு அமைப்பதற்கு முடியுமான சாத்தியக்கூறு தொடர்பாகவும் கவனம் செலுத்தி, இதன் சட்டத் தன்மை தொடர்பாகவும் தேடிப்பார்ப்பேன்.

அதேநேரம் ஜனாதிபதியுடனும் கலந்துரையாடி கொவிட் குழு மற்றும் அதன் செயற்பாடுகளின் தீர்மானங்கள் தொடர்பாக ஆராய்ந்து அதன் அறிக்கையை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பேன். - என்றார். (05)

# 6 லட்சம் பயனாளர்களுக்கு வெள்ளிமுதல் கொடுப்பனவு

## அமைச்சர் செஹான் சேமசிங்க தகவல்

ஆறு லட்சத்து 44 ஆயிரத்து 783 பயனாளர்களுக்கு இன்று (வெள்ளிக்கிழமை) முதல் கடந்த ஜூலை மாதத்துக்கான நலன்புரி கொடுப்பனவு பிரதேச செயலக பிரிவுகள் ஊடாக வழங்கப்படும்.

அஸ்வெசும நலன்புரித் திட்டத்தில் முதல் கட்டமாக தெரிவு செய்யப்பட்ட பயனாளர்களுக்கு இம் மாதத்துக்குள் கொடுப்பனவுகளை வழங்க எதிர்பார்த்துள்ளோம் என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற ஏற்றுமதி மற்றும் இறக்குமதி ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

நீரிழிவு நோயாளர்கள், விசேட தேவையுடையவர்கள், சிரேஷ்ட பிரஜைகள் மற்றும் குறைந்த வருமானம் பெறும் தரப்பினர்களுக்கு ஜூலை மாதத்துக்கான நலன்புரி கொடுப்பனவுகளை வழங்க 2664 மில்லியன் ரூபாவை திறைசேரி சகல பிரதேச செயலகங்களுக்கும் வழங்கியுள்ளது.



6 லட்சத்து 44 ஆயிரத்து 783 பயனாளர்களுக்கான ஜூலை மாத கொடுப்பனவு இன்று முதல் பிரதேச செயலகங்கள் ஊடாக வழங்கப்படும். ஆகவே, பயனாளர்கள் எவ்வித கலக் குகமும் இல்லாமல் பிரதேச செயலகங்கள் ஊடாக வழமை போல் தமக்கான கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

அஸ்வெசும நலன்புரி செயற்திட்டத்தில் தோற்றம் பெற்றுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வரை இதுவரை காலமும் வழங்கப்பட்ட நலன்புரி கொடுப்பனவுகளைத் தொடர்ந்து வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆலோசனை வழங்கினார். இதற்கமைய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அஸ்வெசும நலன்புரி திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பயனாளர்களில் பெரும்பாலானோர் அனுப்பி வைத்துள்ள வங்கி வைப்புக்களின் தகவல்கள் பிழையானவை. ஆகவே, தவறுகளை திருத்திக் கொள்ள நலன்புரி சபை உரிய நடவடிக்கைகளை தற்போது பிரதேச செயலகங்கள் ஊடாக முன்னெடுத்துள்ளது. அஸ்வெசும நலன்புரி திட்டத்தின் முதல் கட்ட பெயர் பட்டியலுக்குள் உள் வாங்கப்பட்டவர்கள் இதுவரை பிரத்தியேக வங்கி கணக்கை ஆரம்பிக்காமல் இருந்தால் வெகுவிரைவில் புதிய கணக்கை ஆரம்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். - என்றார்.

# நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் ஆயுதங்களை ஒப்படைக்கவில்லை

1980 முதல் 1990 வரையிலான காலப்பகுதியில் தமக்கு வழங்கப்பட்ட ஆயுதங்களை பெரும்பாலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்னும் மீள ஒப்படைக்கவில்லை என நாடாளுமன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும சபையில் எழுப்பிய கேள்விக்கு வழங்கிய பதிலில் இது தெரியவந்துள்ளது.

மேலும், ஆயுதங்கள் வழங்கப்பட்ட 150 பேரில் 100 இற்கும் மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்று வரை ஆயுதங்களைத் திருப்பிக் கொடுக்கத் தவறியுள்ளனர் என சபையில் சமர்ப்பிக்கப்பட்ட பதிலில் கூறப்பட்டுள்ளது.

சபையில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின்படி ஆயுதங்களை திருப்பிக் கொடுக்காத நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் இன்று நோய்வாய்ப்பட்டுள்ளனர்.

இதேவேளை 1989 ஆம் ஆண்டு முதல் இன்று வரை எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினருக்கும் தானியங்கி ஆயுதங்கள் வழங்கப்பட்டதா? என்று அழகப்பெரும எழுப்பிய துணைக் கேள்விக்கு பதிலளித்த பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன், எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினருக்கும் இது போன்ற ஆயுதங்கள் வழங்கப்படவில்லை என்று குறிப்பிட்டுள்ளார். (05)



# எச்சரிக்கை விடுத்த பிக்குவுக்கு சாணக்கியன் கொடுத்த பதிலடி

தமிழருக்கு ஒரு நீதி சிங்களவர்களுக்கு ஒரு நீதியா? எல்லா வகையிலும் காலம் காலமாக பாதிக்கப்படுவது தமிழ் பேசும் மக்களே என நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் குற்றம் சுமத்தியுள்ளார்.



மட்டக்களப்பு மாவட்டத்தில் பண்ணையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வதற்கு சென்றிருந்த பல்சமய தலைவர்கள், பண்ணையாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்களை, சிறைபிடித்த பிக்கு உள்ளிட்ட குழுவினர் தனது பெயர் சொல்லி அங்கு சென்றவர்களுக்கு பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தியிருந்ததாக சாணக்கியன் மேலும் தெரிவித்திருந்தார்.

குறித்த விடயம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் வெளியிட்டுள்ள அறிக்கையில் -


இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபடும் பிக்குகளுக்கும் அவரை சார்ந்த பெரும்பான்மை இனத்தவர்களுக்கும் பொலி-ஸார் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், சர்வதேச குற்றவியல் சட்டம் மற்றும் வெறுக்கத்தக்க பேச்சு என்பவற்றால் பிக்கு கைது செய்யப்பட வேண்டும்.

தமிழருக்கு ஒரு நீதி சிங்களவர்களுக்கு ஓர் நீதியா? எல்லா வகையிலும் காலம் காலமாக பாதிக்கப்படுவது தமிழ் பேசும் மக்களே.

இதற்கான தகுந்த நடவடிக்கைஎடுக்கப்பட வேண்டும். எம்மால் இயன்ற அழுத்தங்களை பிரயோகித்து வருகின்றோம்.

பிக்கு சொல்வதை போன்று எமது மக்களின் இவ்வாறான பிரச்சினைக்கு தமிழரசுக் கட்சியும் நானுமே அழுத்தம் கொடுத்து வருகின்றோம். எனினும் குறிப்பாக அரச சார் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களின் மௌனம் இந்த விடயத்தில் மிகுந்த சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. - எனத் தெரிவித்துள்ளார். மட்டக்களப்பு - மயிலந்தமடு பிரதேசத்தில் பல்சமய தலைவர்கள், பண்ணையாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் செவ்வாய்க்கிழமை சிறை பிடிக்கப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# அடுத்த மாதம் இலங்கைக்கு வருகின்றார் இந்திய பாதுகாப்பமைச்சர் ராஜ்நாத் சிங்



இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் அடுத்த மாதம் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கைக்கு அடுத்த மாதம் விஜயம் மேற்கொள்ளவுள்ள ராஜ்நாத் சிங் இந்தியா மூலோபாய ரீதியில் முதலீடு செய்துள்ள திருகோணமலைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

இருநாடுகளுக்கும் இடையில் பெற்றோலிய உற்பத்திகளை பரிமாற்றம் செய்வதற்கான குழாய் உருவாக்கம் தொடர்பிலேயே அமைச்சரின் திருகோணமலை விஜயம் அமைந்திருக்கும். (05)

# இரண்டு நிலங்களையும் இணைப்பதற்கு முன்னர் சிறுபான்மை சமூக மனங்களை ஒன்றிணைக்குக

## முஷாரப் எம்.பி. கோரிக்கை

பெரும்பான்மை சமூகத்தின் நடவடிக் கைகளுக்கு விமர்சனம் செய்கின்ற நாம் சிறுபான்மை சமூகத்தின் பிரச்சினைகள் தொடர்பில் எவ்வித நடவடிக் கைகளை எடுத்துள்ளோம் என நாடாளுமன்ற உறுப்பினர் முஷாரப் முதுநபின் கேள்வியெழுப்பியுள்ளார். நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். மேலும் தெரிவிக்கையில் –வடக்கு, கிழக்கு ஒருங்கிணைவு ஒப்பந்தத்தில் முஸ்லீம் சமூகமும் தமிழ் சமூகமும் மொழிரீதியா ஒன்றுபடுவோம் என்ற விடயம் 1976 மற்றும் 1987 ஒப்பந்தங் களில் முன்னெடுக்கப்பட்டதை ஏற்றுக் கொள்கின்றோம். ஆனால் இரு நிலங்களையும் இணைக்கும் என கருத்துரைத்த தமிழ் தரப்பு இருமனங்களையும் இணைப்பதற்கான சாத்தியங்களை முஸ்லீம் தரப் புக்கு உருவாக்கியுள்ளதா என கேள்வியெழுப்பியுள்ளார். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# முஸ்லிம் இளைஞர் திருமண சட்டத்தில் திருத்தங்கள் தேவை என்கிறார் ரிஷாத்

வேறொரு நாட்டின் குடியுரிமை பெற்ற இலங்கை முஸ்லிம் ஒருவர், இங்கு வந்து திருமணம் செய்ய முடியாது என்ற தடை நீக்கப்பட வேண்டுமென அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றில் உரையாற்றிய அவர் மேலும் கூறியவை வருமாறு -

நாடாளுமன்ற உறுப்பினர் சஞ்சீவ எதிரிமான கொண்டுவந்த இந்தப் பிரேரணை காலத்துக்குத் தேவையான ஒன்றாகும். பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப் பதிவாளர்களின் வசதிகளைப் பார்க்கின்ற போது, மிகவும் மோசமான ஒரு நிலையே காணப்படுகின்றது. திருமணப் பதிவொன்றின் கொடுப்பனவாக 1140 ரூபா மாத்திரமே வழங்கப்படுகின்றது. அதில் 240 ரூபா அரசுக்கு வழங்கினால் 900 ரூபா அளவிலேயே அவர்களுக்கு கொடுப்பனவாகக் கிடைக்கின்றது. பிறப்புச் சான்றிதழ் பதிவாளருக்கு பிறப்புச் சான்றிதழ் ஒன்றுக்கு 75 ரூபா வழங்கப்படுகிறது. அலுவலக பராமரிப்புக்கென மாதம் ஆயிரம் ரூபாவும், அதுவும் கொழும்பு போன்ற மாவட்டங்களில் ஆயிரம் ரூபாவும் தூர இடங்களில், கிராமப்புறங்களில் உள்ள பதிவாளர்களுக்கு 700 ரூபாவும் வழங்கப்படுகிறது. காகிதாதிகள், உபகரணங்கள் செலவுக்கு மாதம் ஒன்றுக்கு 500 ரூபாவே பதிவாளர்களுக்கு வழங்கப்படுகிறது. தற்போதைய வாழ்க்கைச் செலவுடன் ஒப்பிடும்பொழுது இந்தக் கொடுப்பனவுகள் மிகவும் சொற்பளவிலேயே இருக்கின்றன. இவற்றைக் கவனத்திற்கொண்டு மேற்படி கொடுப்பனவுகளை அதிகரிக்க நடவடிக்கை எடுக்குமாறு, விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரிடம் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

அதேபோன்று, உதாரணமாக கம்பஹா போன்ற மாவட்டங்களில் உள்ள ஒரு திருமணப் பதிவாளர் கொழும்புக்கு வந்து ஒரு திருமணப் பதிவைச் செய்யும் போது, பல இன்னல்களை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது. குறித்த பதிவாளர் கொழும்பில் உள்ள பதிவாளர் நாயக திணைக்களத்துக்குச் சென்று அனுமதியைப் பெறவேண்டிய கட்டாயத்தில் உள்ளார்.

இதனால் பல நாள்களை செலவிட வேண்டிய துர்ப்பாக்கியம் அவருக்கு ஏற்படுகின்றது. அவருக்கு 4000 ரூபா கொடுப்பனவு கிடைக்கின்ற போதும், அவர் பல நாள்கள் நேரவிரயம் செய்ய வேண்டிய சூழ்நிலையும் உருவாகின்றது. எனவே, இந்தப் பதிவை ஒன்லைன் முறையில் செய்ய முடியும். ஏனெனில், தற்போதுள்ள தொழில்நுட்ப வசதி அதற்கு ஏதுவாக இருக்கும். இவ்வாறான முறைமை பின்பற்றப்பட்டால் பதிவாளர்களுக்கு தமது காரியங்களை நிறைவேற்ற இலகுவாக இருக்கும். இதன்மூலம் செலவு மற்றும் நேரம் மட்டுப்படுத்தப்படுகின்றது.



அதேபோன்று, வெளிநாட்டில் உள்ள இலங்கையர், குறிப்பாக முஸ்லிம் ஒருவர், அந்த நாட்டின் குடியுரிமையைப்பெற்றுவிட்டார் என்றால் அவர் மீண்டும் நமது நாட்டுக்கு வந்து திருமணம் செய்வதற்கு அதாவது, திருமணப் பதிவை மேற்கொள்வதற்கு தடைகள் இருக்கின்றன. இலங்கையில் வாழும் ஒரு முஸ்லிம் பெண்ணை, வெளிநாட்டுக் குடியுரிமை பெற்ற முஸ்லிம் ஒருவர் இங்கு வந்து திருமணம் செய்வதற்கு பல சிரமங்கள் உள்ளன. இது முஸ்லிம்களுக்கு மாத்திரம் பிரயோகிக்கப்படுகின்ற தடையாகவே காணப்படுகின்றது. அவ்வாறான ஒருவர் திருமணப் பதிவை மேற்கொள்வதாக இருந்தால் இந்தியாவுக்கோ அல்லது வேறொரு நாட்டுக்கோ அந்த மணப்பெண்ணை வரவழைத்து திருமணம் செய்ய வேண்டிய நிலை உருவாகியுள்ளது. இதன் மூலம் நமது நாட்டுப் பணமும் விரயமாகின்றது. எனவே, இது தொடர்பில் அக்கறை எடுத்து, இந்தச் சட்டத்தில் ஆக்கபூர்வமான திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டுமென நான் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

2013 ஆம் ஆண்டில் ஒரு சுற்றுநிருபம் வெளியானது. அந்த சுற்றுநிருபத்தில் திருமணப் பதிவுக்கு 'இலங்கை முஸ்லிமாக இருக்க வேண்டும்' என்று கூறப்பட்டுள்ளது. எனவே, ஐரோப்பா, கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளில் குடியுரிமை பெற்ற இலங்கை முஸ்லிம் ஒருவர், இங்கு வந்து திருமணம் செய்ய முடியாத நிலையைக் கருத்திற்கொண்டு இந்தத் தடை நீக்கப்பட வேண்டும். ஏனைய மதத்தினருக்கு இவ்வாறான தடைகள் இல்லை. எனவே, முஸ்லிம்களுக்கு மாத்திரம் ஏற்படுத்தப்பட்டுள்ள இந்தத் தடையை நீக்குமாறு வேண்டுவதுடன், இலங்கையில் வாழும் பெண்களின் அடிப்படை உரிமையும் இதனால் மீறப்படுகின்றன என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். - என்றார்.

(05)

# வறட்சிப் பாதிப்பு மன்னாரில் 3 ஆயிரத்தைத் தாண்டியது

மன்னாரில் அண்மைக் காலமாக நிலவிவரும் கடுமையான வறட்சி காரணமாக 3 ஆயிரத்து 244 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் கடந்த ஆறு மாதங்களுக்குமேலாக வறட்சியான காலநிலை நிலவி வருகின்றமையால் பொதுமக்கள் மாத்திரமல்லாது ஆயிரக்கணக்கான கால் நடைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

இதுதொடர்பாக மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவினர் வழங்கிய தகவலின் படி 'மடு பிரதேச செயலக பிரிவில் உள்ள மலவராஜன் கட்டையடம்பன், மாதா கிராமம், பெரிய முறிப்பு, இரணை இலுப்பகுளம், கீரிசுட்டான் போன்ற பகுதிகள் அதிகளவில் பாதிப்படைந்துள்ளன.

குறிப்பாக 952 குடும்பங்களை சேர்ந்த 3 ஆயிரத்து 244 பேர் நேரடியாக பாதிக்கப்பட்டுள்ளர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இந்த வறட்சியான காலநிலை தொடரும் பட்சத்தில் பாதிக்கப்படும் குடும்பங்களின் எண்ணிக்கை பல மடங்கு அதிகரிக்கலாம் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)





# ஆசிரியர் தொழிலை விட்டுசென்றோருக்கு ஆபத்து என்கிறார் கல்வி அமைச்சர் சுசில்

ஆசிரியர் தொழிலை விட்டுசென்றவர்களுக்கு பதிலாக பட்டதாரிகளையும் ஓய்வுபெற்ற ஆசிரியர்களையும் நியமிப்பதற்கான அதிகாரத்தை விரைவில் மாகாண சபைகளுக்கு வழங்கவுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹினி குமாரி விஜேரத்ன எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டிலுள்ள ஆரம்ப நிலை கல்வி முற்றிலும் வீழ்ச்சியடைவதற்குகாரணம் கொவிட் மட்டுமல்ல பயிற்சியற்ற ஆசிரியர்களை ஆரம்பப் பிரிவிற்கு உட்படுத்தியமையே பிரதான காரணம்.

இவ்வாறு பயிற்சியற்ற ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்கி பரீட்சை நடத்தி உரிய பிரிவுகளுக்கு நியமிப்பதற்காக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கையை ஒரு பிரிவினர் நீதிமன்றத்துக்கு சென்று தடை செய்தார்கள்.

இது நில வழக்கு அல்ல. பாடசாலை மாணவர்களின் விடயத்தில் அனைவரும் சிந்தித்து செயற்பட வேண்டும். இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிப்பதற்கு இது நில வழக்கு அல்ல.

இடைக்காலத் தடை உத்தரவுக்கான விளக்கத்தை நீதி அமைச்சரிடம் கேட்க விரும்புகின்றேன். இடைக்கால தடை உத்தரவு நிரந்தர உத்தரவாக இருக்க முடியாது.

இடைக்கால உத்தரவுகளுக்கு கால அவகாசம் இருக்க வேண்டும். அதற்கு சிவில் நடைமுறை சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டும்.

சட்டத்துறை அமைச்சரிடம் திருத்தம் கொண்டு வர வேண்டும். ஆறு மாதங்களுக்கு இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அனைவரும் நீதி கோரி நீதிமன்றத்துக்கு செல்கின்றார்கள் ஆனால் மாணவர்களுக்கு இழைக்கப்படும் அநீதி குறித்து யாரும் கேள்வி கேட்பதில்லை.

அதிபர்களை நியமிக்க முடியாது. இதுபோன்ற விடயங்களால் மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்படுகிறது.

இவற்றைப் பதிவிடும் மனுதாரர்களுக்கு இது புரியவில்லையா. எதிர்வரும் இரண்டு வாரங்களில் ஓய்வுபெற்ற ஆசிரியர்களை பணியமர்த்த மாகாண சபைகளுக்கு அதிகாரம் வழங்கப்படும்.

ஆசிரியர் தொழிலை விட்டுசென்றவர்களுக்கு பதிலாக பட்டதாரிகளையும் ஓய்வுபெற்ற ஆசிரியர்களையும் நியமிப்பதற்கான அதிகாரத்தை எதிர்வரும் 2 வாரங்களில் மாகாண சபைகளுக்கு வழங்குவேன்.

அதற்கான அமைச்சரவை பத்திரத்தை முன்வைக்க தீர்மானித்துள்ளேன்' என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)





# வவுனியாவில் 187 பேருக்கு உதவி

சிங்கப்பூர் மகாகருண பௌத்த சங்கத்தின் ஏற்பாட்டில் வவுனியாவில் 187 பேருக்கான உதவித் திட்டங்கள் கடந்த செவ்வாய்க்கிழமை வழங்கி வைக்கப்பட்டன. வவுனியா, ஈரப்பெரியகுளம் பகுதியில் உள்ள பௌத்த பொது நோக்கு மண்டபத்திலேயே குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை மக்களுக்கு உதவும் முகமாக சிங்கப்பூரில் அமைந்துள்ள மகாகருண பௌத்த அமைப்பின் நிதி உதவியில் 62 மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் மற்றும் பணம் என்பனவும், 60 கர்ப்பிணிப் பெண்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருள்கள், 65 குடும்பங்களுக்கு தேவையான வாழ்வாதாரப் பொருள்கள் என்பனவும் இதன்போது வழங்கி வைக்கப்பட்டன.

இலங்கை தேசிய கீதம் மற்றும் சிங்கப்பூர் தேசிய கீதத்துடன் ஆரம்பமான இந்நிகழ்வில் சிங்கப்பூரில் இருந்து வருகை தந்த 15 இற்கும் மேற்பட்ட பௌத்த சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். அத்துடன் வவுனியா மாவட்ட அரச அதிபர் பீ.ஏ.சரத்சந்திர, மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ் குமார், வவுனியா உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் மல்வலகே, மதத்தலைவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பொது மக்கள் எனப் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இதேவேளை, வவுனியா, மூன்று முறிப்பு பகுதியில் உள்ள ஆரம்ப பாடசாலையைச் சேர்ந்த 86 மாணவர்களுக்கும், அவர்களுடைய பெற்றோருக்கும் குறித்த அமைப்பால் உதவித் திட்டங்கள் வழங்கி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# தோட்டத் தொழிலாளர்கள் உரிமை வழங்க உடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

## வலியுறுத்தி ஹற்றனில் கையெழுத்து வேட்டை

தோட்டத் தொழிலாளர்கள் உட்பட மலையக பெருந்தோட்ட மக்களுக்கு அவர்களுக்குரிய உரிமைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தி கையெழுத்து திரட்டும் நடவடிக்கை ஹற்றனில் புதன்கிழமை ஆரம்பமானது.

அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான ஜே.வி.பியின் பெருந்தோட்ட தொழிற்சங்க கிளையான அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கத்தால் இதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மலையக மக்கள் இந்நாட்டுக்கு வருகை தந்து 200 வருடங்கள் கடந்துள்ளன. எனினும், அவர்களின் பொருளாதார மேம்பாடு, வாழ்வாதார மேம்பாடு, உரிமைகள் தொடர்பில் எந்தவொரு அரசும் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. இதற்கு எதிர்ப்பு தெரிவித்தும், தோட்டத் தொழிலாளர்கள் உட்பட மலையக மக்களுக்கு அவர்களுக்குரிய உரிமைகளை வழங்குமாறு வலியுறுத்தியே கையெழுத்து திரட்டப்படுகின்றது. - என்று ஏற்பாட்டுக்குழு அறிவித்தது.

அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைவர் கிட்ணன் செல்வராஜ், செயலாளர் டி.எம். பிரேமந்திர, உப செயலாளர் கலைச்செல்வி உள்ளிட்டோரின் பங்கேற்புடன் கையெழுத்து வேட்டை ஆரம்பமானது.

இதன்போது கருத்து வெளியிட்ட சங்கத்தின் செயலாளர் கூறியவை வருமாறு -

தோட்டத் தொழிலாளர்கள் இலங்கைக்கு வந்து 200 வருடங்கள் கடந்துள்ள போதிலும் காணிப் பிரச்சினை, வீட்டு பிரச்சினை, கல்வி, சுகாதாரப் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு காணப்படவில்லை. மாறாக தொழிலாளர்களின் ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி என்பனவும் கொள்ளையடிக்கப்படுகின்றன. இதற்கு இடமளிக்க முடியாது. மக்களுக்கான உரிமைகளை பெற்றுக்கொடுக்க எமது சங்கம் முன்னின்று செயற்படும். - என்றார். (05)

# சீன கப்பல் இலங்கை வருவதற்கு முன்னர் வருகின்றார் இந்திய பாதுகாப்பு அமைச்சர்



அடுத்த மாதம் இலங்கை வரவுள்ள இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், திருகோணமலைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலையில் பெற்றோலியப் பொருள்களை மாற்றுவதற்காக இரு நாடுகளையும் இணைக்கும் குழாய் திட்டத்தை அமைக்கும் இறுதி நோக்கத்துடன் இந்தியா முதலீடுகளை மேற்கொண்டுள்ளது.

இந்நிலையில் எதிர்வரும் செப்ரெம்பர் 2 அல்லது 3 ஆம் திகதி ராஜ்நாத் சிங் இலங்கைக்கு வருவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த விஜயத்தின் போது அவர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் அவரது பணிமனைகளின் பிரதானி சாகல ரத்நாயக்க ஆகியோருடன் பேச்சு நடத்தவுள்ளார்.

இதுதவிர சீன ஆராய்ச்சிக் கப்பலான ஷியான் 6 கப்பல் வருவதற்கு முன்னதாகவே இந்திய பாதுகாப்பு அமைச்சரின் வருகை திட்டமிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக இந்தியா ஏற்கனவே கவலை தெரிவித்துள்ள நிலையில் சீனக்கப்பலின் வருகைக்கு இலங்கை இன்னும் அனுமதி வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (05)

# காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் மன்னாரில் பெரும் பேரணிக்கு அழைப்பு

சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தினத்தை முன்னிட்டு, எதிர்வரும் 30 ஆம் திகதி மன்னாரில் பாரிய பேரணி ஒன்றை முன்னெடுக்க காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் அறிவித்துள்ளனர்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று (வியாழக்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே இதனைத் தெரிவித்துள்ளனர்.

மன்னார் சதோச புதைக்குழியில் இருந்து, விளையாடரங்கு வரையில் குறித்த பேரணி செல்லவுள்ளதாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் அறிவித்துள்ளனர்.

யாழ்ப்பாண பல்கலைகழக மாணவர்கள், வர்த்தக சங்கத்தினர், தமிழ் தேசிய அரசியல்வாதிகள், அரசியல் செயற்பட்டாளர்கள், மத குருமார்கள் என அனைவருக்கும் அவர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

போராட்டத்துக்கு செல்வோருக்கான இலவச வாகன ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன எனவும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் அறிவித்துள்ளனர்.

(05)

காலைக்கதிர் Kalaikkathir




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.08.2023இல் வெளியிடப்பெற்றது.